# உதயன்


சுடர் : 36 கதிர் : 269 | செவ்வாய்க்கிழமை | ஆவணி 7ஆம் நாள் 24 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



## சட்டப்போராளி கௌரி தவராசா கொரோனாவால் உயிரிழந்தார்

கொழும்பு, ஓக. 24
ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவின் துணைவியாரான, சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா நேற்றுக் காலமானார். கொரோனாத் தொற்றால் பீடிக்கப்பட்டிருந்த அவர், மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில், சிகிச்சை பயன

15 ➤



## 4,353 நேற்று தொற்று

கொழும்பு, ஓக. 24
இலங்கையில் நாளாந்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டாவது நாளாக நேற்று 4 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.
நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியான 4 ஆயிரத்து 353 பேர் நேற்று அடையாளம் காணப்பட்

15 ➤

## 103 பெண்கள் உட்பட மேலும் 194 பேர் சாவு

கொழும்பு, ஓக. 24
இலங்கையில் மேலும் 194 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 103 பெண்

15 ➤

# வடக்கில் நேற்று தொற்று 144

### யாழ்ப்பாணத்தில் மட்டும் 102

யாழ்ப்பாணம், ஓக. 24
வடக்கு மாகாணத்தில் 144 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதிலும் அதிகளவாக யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 102 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது.

15 ➤

## வாள்வெட்டுக்கு இலக்கானவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 24
வன்முறைக் கும்பலின் வாள் வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.
குருநகரைச் சேர்ந்த ஜெரன் (வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார்.
யாழ்ப்பாணம் குருநகர் கடற்

15 ➤



ஹிஷாலினி வழக்கில்

## 5ஆவது சந்தேகநபராக ரிஷாத் பதியுதீன் எம்.பி.

கொழும்பு, ஓக. 24
சிறுமி ஹிஷாலினியின் உயிரிழப்பின் 5ஆவது சந்தேகநபராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பெயரிடப்பட்டுள்ளார்.
ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலையில்

15 ➤

## முல்லையிலும் ஒருவர் சாவு

முல்லைத்தீவு, ஓக. 24
முல்லைத்தீவு நாயாற்றில் பருவ கால மீன்பிடித்தொழில் நடவடிக்கைக்கு வந்த ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.
உடல் சுகவீனமடைந்த நிலையில் முல்லைத்தீவு

15 ➤

முடக்க கால நிவாரணம்:

## கோரியது 57,000 பேருக்கு கிடைத்தது 36,000 பேருக்கே!

யாழ்ப்பாணம், ஓக. 24
யாழ்ப்பாண மாவட்டத்தில் 56 ஆயிரத்து 372 பேர் முடக்ககால நிவாரணம் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என்று பிரதேச செயலர்கள் பரிந்துரைத்திருந்தபோதும், அரசால் 36 ஆயிரம் பேருக்குரிய கொடுப்பனவே விடுவிக்கப்பட்டுள்ளது.
கொரோனாப் பேரிடர் காரணமாக நாடு முழுவதும் எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

15 ➤

## யாழ்ப்பாணத்தில் மூவர் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 24
யாழ்ப்பாணத்தில் மேலும் 3 பேர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்தனர்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில்

15 ➤

மருத்துவமனையில் சிகிச்சைபெற

## பெயர் பதிவு செய்யும்போதே வீழ்ந்து இறந்த தொற்றாளர்

வவுனியா, ஓக. 24
காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெற வவுனியா மருத்துவமனைக்கு சென்ற நபர், தனது பெயர் விவரங்களை பதிவுசெய்து கொண்டிருந்தபோதே நிலத்தில் வீழ்ந்து உயிரிழந்தார்.

15 ➤

## அமைச்சர்களின் சம்பளம் கொவிட் நிதியத்துக்கு

*சு.க. எம்.பிக்கள் 14 பேரின் சம்பளமும் கையளிப்பு*

கொழும்பு, ஓக. 24
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான கூட்டணி அரசின் அமைச்சர்களின் ஓகஸ்ட் மாத சம்பளத்தை கொவிட் நிதியத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவைக்

15 ➤


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றாளர்கள் 2 லீற்றர் தண்ணீர் குடியுங்கள்

## ஊட்டச்சத்து பேராசிரியர் அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 24

**கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நோயாளிகள் நீரிழப்பைத் தடுப்பதற்காக தினமும் இரண்டு லீற்றர் தண்ணீர் அருந்த வேண்டும். அரை மணி நேரத்துக்கு ஒரு முறை ஒரு கிளாஸ் தண்ணீர் அருந்தவேண்டும் என்று கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஊட்டச்சத்து பேராசிரியர் மருத்துவர் ரணில் ஜயவர்த்தன தெரிவித்தார்.**



இருமல், சுவாசப் பிரச்சினை மற்றும் சுவை இன்மை ஆகிய அறிகுறிகள் உள்ள கொரோனா நோயாளிகள் உட்பட சிறிதளவு காய்ச்சல் உள்ள நோயாளிகளும் தண்ணீர் குடிப்பதற்கு சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தகைய நபர்கள் உணர்வுபூர்வமாக அதிக தண்ணீர் குடிக்க வேண்டும் என்றும் தண்ணீர் குடிக்கும் பதிவை வைத்திருப்பது நீர் உட்கொள்ளலை கண்காணிக்கும் ஒரு முறையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்,

ஒருவரின் சிறுநீரின் நிறத்தின் மூலம் போதுமான அளவு தண்ணீர் குடித்திருக்கிறாரா என்பதைத் தீர்மானிக்க முடியும். போதுமான அளவு தண்ணீர் உடலில் சேர்ந்திருந்தால் தெளிவான சிறுநீர் வெளியேறும். மேலும், விற்றமின்களை உட்கொண்டால், அது சிறுநீரின் நிற மாற்றத்துக்கு பங்களிக்கும் என்றும் அது விதிவிலக்கு என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-இ)

### பயங்கரவாத தடைச்சட்ட வழக்குகளில்

# பலரின் விடுதலைக்குக் காரணமான கௌரிசங்கரியின் இறப்பு பேரிழப்பு

## தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தர் சரவணபவன் இரங்கல்

யாழ்ப்பாணம், ஓக. 24

பயங்கரவாத தடைச் சட்ட வழக்குகளில் மூத்த சட்டத்தரணிகளே முன்னிலையாக பயந்த காலங்களில் துணிச்சலாக களமிறங்கி பலரின் விடுதலையை சாத்தியமாக்கியதுடன் தொடர்ந்தும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் காரணமாயிருந்தவர், சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா. அத்தகையவரின் இறப்பு பேரிழப்பாகிவிட்டது.

இவ்வாறு இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், உதயன் குழுமத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரான சிரேஷ்ட சட்டத்தரணி வி.எஸ். தவராசாவின் பாரியார் சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றேன். அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் பங்குபெறுவதோடு அவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டில் அதிகம் பேசப்படுகின்ற பல வழக்குகளில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா முன்னிலையாகியிருந்தார். தமிழ் அரசியல் கைதிகளுக்காக வாழ்நாள் முழுவதும் வாதாடிய சிரேஷ்ட சட்டத்தரணி என மறைந்த பெருந்தகை போற்றப்படுகிறார். சவால் மிக்க பல வழக்குகளை எதிர்கொண்டவர். அவர், புகழ்பெற்ற சிரேஷ்ட சட்டத்தரணி மட்டுமல்ல தலைசிறந்த மனித உரிமைச் செயற்பாட்டாளருமாவர். அத்துடன் தமிழ் தேசியத்தின்பால் அதீத பற்றுக் கொண்டவர்.

1983க்குப் பின்னரான காலகட்டத்தில் எதுவித குற்றமும் அறியாத பல தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டபோது தன்னலம் கருதாது தாமாக முன்வந்து பல தமிழ் இளைஞர்களை காப்பாற்றியவர். நாட்டின் முக்கியமான வழக்குகளிலும், சர்வதேச அளவில் பேசப்படும் வழக்குகளிலும் கௌரிசங்கரி தவராசா முன்னிலையாகியிருந்தவர்.

அது மட்டுமல்ல எமது உதயன் பத்திரிகை நிறுவனம் மீது அதிகாரவர்க்கத்தினர் திட்டமிட்டு பொய்



வழக்குகள் பலவற்றைத் தாக்கல் செய்தபோது, அதை சட்ட ரீதியாக எதிர்கொண்டவர்கள் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவும், அவரது பாரியார் கௌரிசங்கரி தவராசாவும் ஆவர். சட்டத்தரணி தவராசா தம்பதியர், பல சவால்களுக்கு முகம்கொடுத்து நீதிமன்றங்களில் தோன்றி வழக்குகளிலிருந்து உதயன் நிறுவனம் விடுபட பேருதவி புரிந்துள்ளனர்.

இந்தநிலையில், சுகவீனம் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், திருமதி கௌரிசங்கரி தவராசா நேற்று மாலை காலமானதாக அறிந்தேன்.

அமரர் கௌரிசங்கரி தவராசாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன் - என்றுள்ளது.

(த)

# கொரோனாப் பயத்தால் உறங்குகின்றது கொழும்பு

கொழும்பு, ஓக. 24

அத்தியாவசிய சேவைகளுக்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையிலான ஊழியர்களை கடமைக்கு அழைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியிருந்தாலும், கொழும்பு மாநகரம் உட்பட புறநகர்ப் பகுதிகளுக்கு வருபவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கொழும்பு நீர்கொழும்பு வீதி, ஹைலெவல் வீதி, கொழும்பு காலி வீதி ஆகியவற்றில் வழமைபோல் வாகன நெரிசல் இல்லை. வீதிகளில் உள்ள பெரும்பாலான வாகனங்கள் அத்தியாவசிய சேவைகளுக்காக மட்டுமே பயணிக்கின்றன என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

முக்கியமான நகரங்களில் கிட்டத்தட்ட அனைத்து கடைகளும் மூடப்பட்டுள்ளன. திறக்க அனுமதிக்கப்பட்ட மருந்தகங்களில் மட்டுமே மக்கள் தென்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-இ)

### கொரோனாத் தொற்றுக்குள்ளான

# தேர்தல்கள் ஆணையாளருக்கு திடீரென மூச்சுத் திணறல்



கொழும்பு, ஓக. 24

கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த தேர்தல்கள் ஆணையாளர் ஜெனரல் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளானதன் பிறகு அவர் கண்டியிலுள்ள தனது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். இந்தநிலையில், அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதையடுத்து தெல்தெனிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அவருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது அவரின் உடல்நிலை தேறி வருவதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(த-இ)

# வரணி வடக்கு பகுதியில் 26 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாணம் வரணி வடக்கு ஜே339 கிராம அலுவலர் பிரிவில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அதிவிரைவு அன்டிஜென் பரிசோதனையில் 26 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வடவரணி கறுக்காயில் உள்ள பனை, தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் மதுபான வடிசாலையின் பணியாளர்களுக்கு கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தொற்று ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து அங்கு பணியாற்றியவர்களின் குடும்ப உறுப்பினர்கள், பணியாள்கள் பலருக்கு தொற்று அதிகரித்து வந்தநிலையில் அங்கு பல குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தன.

இந்தநிலையில், வரணி வடக்கு ஸ்ரீ கணேசா சனசமூக நிலையத்தில் நேற்று 79 பேருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன்போது 26 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(த-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளித்தெரியாத் தொற்றுடன் சமூகத்தில் பலர் நடமாட்டம்

## அவதானமாகச் செயற்பட வேண்டும் என மருத்துவர் யமுனாநந்தா அறிவுரை

**யாழ்ப்பாணம், ஓக.24**

**சமூகத்தில் இனங்காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கில் சமூகத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் இருப்பார்கள் என்று யாழ். போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளரும் மருத்துவருமான சி.யமுனாநந்தா தெரிவித்தார்.**

கொரோனாத் தொற்றுத் தொடர்பான மருத்துவ புள்ளி விவரவியல் விளக்கங்கள் தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது

கொரோனாத் தொற்றின் பரம்பலில் நோய் தொற்றியவர்களில் 40 தொடக்கம் 50 வீதமானவர்கள் நோய்க் கிருமி தொற்றினாலும் நோய் அறிகுறிகளைக் காட்டாது சமூகத்தில் இருப்பர். சமூகத்தில் இனங்காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கில் சமூகத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் இருப்பர்.

கொரோனா நோயாளிகளின் சராசரி இறப்பு வீதம் 1.5 ஆக உள்ளது. தினமும் 180 பேர் கொரோனாத் தொற்றால் இறக்கும்போது 4 ஆயிரம் பேர் கொரோனாத் தொற்றுடன் நோயாளியாகக் காணப்படுவர். சமூகத்தில் தினமும் 10 ஆயிரம் பேர் கொரோனாத் தொற்றுடன் இருப்பர். சமூகத்தில் 10 ஆயிரம் பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்படும் போதும் மேலும் 10 ஆயிரம் பேர் கொரோனாத் தொற்றுடன் நோய் அறிகுறியின்றி இருப்பர்.

கொரோனாத் தொற்று அறிகுறி உடையவர்களில் 10 வீதமானோர் ஆபத்தான நிலையை அடையக் கூடும். எனவே தினமும் 400 பேர் ஆபத்தான நிலையில் சிகிச்சையைப் பெறுவர். அடுத்து சீனாவில் ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட கொரோனாத் தொற்றின் தொற்று வீதத்தை விடத் தற்போது பரவும் டெல்டா திரிபின் தொற்றுவீதம் இரண்டு மடங்கு அதிகம். மேற்கூறிய புள்ளிவிபரங்கள் கொரோனா தொடர்பான கட்டுப்பாட்டிலும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும் மிகவும் இன்றியமையாதது. அடுத்து கொரோனாத் தொற்று தொடர்பான அச்சம், சமூகவடு என்பவற்றை நீக்கவும் உதவும்.

கொரோனாத் தொற்றின் தீவிர நிலையை ஒருவரின் நோய் எதிர்ப்புச் சக்தியே தீர்மானிக்கின் றது. தடுப்பு மருந்துகள், நோய் எதிர்ப்புச்சக்தி உருவாகுவதில் உதவுகின்றன.

கொரோனா மரணங்களில் 90 வீதத்துக்கு மேல் தடுப்பு மருந்து பெறாதவர்களாலேயே ஏற்படுகின்றது. வயதானவர்கள், ஈரல் நோயுடையோர், சிறுநீரக நோயுடையோர், சலரோக நோயுடையோருக்கு மரணம் ஏற்படுகின்றது.

ஆய்வுகூடப் பரிசோதனைகளான பி.சி.ஆர். சோதனை முடிவுகள் மட்டும் கொரோனா நோய்க்கான சிகிச்சையை தீர்மானிக்காது. ஒருவரில் செயற்திறன் அற்ற கொரோனா வைரஸ் உள்ளபோதும் குணமடைந்தவர்களிலும் பி.சி.ஆர். முடிவுகள் கருத முடியாதவை. அவ்வாறே அன்டிஜென் பரிசோதனைகளும் முற்றுமுழுதாக நோய்த் தொற்றை முழுமையாக வெளிப்படுத்தாது. பொதுவாக நோய் தொற்றி 2 கிழமைகளில் கொரோனாத் தொற்று ஒருவரில் இருந்து பரவும் தன்மை அற்றுப் போகும். கொரோனா நோயாளிகளின் சளியில் 70 வீதமும் மூக்கு நீரில் 60 வீதமும், உமிழ்நீரில் 30 வீதமும் மலத்தில் 30 வீதமும் குருதியில் ஒரு வீதமும் கிருமிகள் பி.சி.ஆர். பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்படலாம்.

பொதுவாக கொரோனாத் தொற்று தும்மும் போதும், இருமும் போதும் நோயாளியில் இருந்து அதிகம் பரவும். இதனாலேயே முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல் மிகவும் முக்கியமானது. ஒருவரைச் சூழ அவரது குடும்பமும், அவர் வேலை செய்யும் சூழலும் உள்வட்டமாக உள்ளது. அதனைச் சூழ வெளிவட்டமாகச் சமூகம் உள்ளது. வெளிவட்டத்தில் தொற்றுத் தீவிரமாக உள்ளபோது சமூக முடக்கத்தைச் சிறப்பாகப் பேணினால் உள்வட்டத்தில் கொரோனாத் தொற்று ஏற்படாது. கொரோனாத் தொற்றுத் தொடர்பான அடிப்படை மருத்துவப் புள்ளிவிவரவியல் அறிவானது கொரோனாத் தொற்றைச் சமூக மட்டத்தில் கட்டுப்படுத்துவதற்கு இன்றியமையாதது- என்றுள்ளது. (எ-26)



## நல்லூர் கந்தனுக்கு இன்று 12ஆம் திருவிழா

**அருள் தர வா முருகா**

சேதுபந்தனம் அமைத்த தீரன் மகிழ் மருக
திருநிறை நல்லூர் தன்னிலே உறையும் வேல் முருகா
ஏதும் வகை அறியோம் உன் எழில் கோலம் காண
இரு மாதருடன் மயில் ஏறி வந்து அருள் தர வா முருகா

புருஷோத்தமன், யாழ்ப்பாணம்.

# அரச சலுகை பெறாதவர்களுக்கே 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள்

## மன்னார் மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார், ஓக. 24

எந்த ஓர் அரச சலுகையையும் பெறாதவர்களுக்கு மட்டுமே 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து தொடர்ச்சியாக பத்து நாள்களுக்கு நாட்டில் முடக்க நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள அன்றாடம் தொழில் வாய்ப்புகளை இழந்த வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இன்று (நேற்று) தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவு கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுநீரக நோயாளிகள், வயோதிபர் கொடுப்பனவு. ஓய்வூதியர்; கொடுப்பனவு மற்றும் சமுர்த்தி போன்ற எந்த ஒரு கொடுப்பனவுகளையும் அரசாங்கத்திடமிருந்து பெறாத குடும்பங்களுக்கு மட்டுமே வழங்கப்படவுள்ளது.

இதற்காக மன்னார் மாவட்டத்திலுள்ள நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்கு மற்றும் மன்னார் நகரம் போன்ற பிரதேச செயலகங்களில் இருந்து 8 ஆயிரத்து 700 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அத்தியாவசிய தேவைகள் மற்றும் மொத்த வியாபார நிலையங்களில் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. என்றார். (ஐ213)

# கொவிட் வைரஸ் தொற்றால் நுரையீரலில் ஏற்படும் சிக்கல்

## முதன்முதலாக கண்டறிந்தது இலங்கை

கொழும்பு, ஓக. 24

கொவிட் நியூமோனியா நிலைமைக்கு முன்னதாக நுரையீரலில் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பில் முதற்தடவையாக இலங்கை கண்டறிந்துள்ளது.

கொவிட் தொற்றால் உயிரிழந்தவர்களின் பிரேத பரிசோதனைகளில் நுரையீரல் சிக்கல் நிலை கண்டறியப்பட்டுள்ளது. தேசிய தொற்று நோயியல் நிறுவகம் மற்றும் கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் விசேட சட்ட வைத்திய அதிகாரி சன்ன பெரேராவால் அந்தச் சிக்கல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நியூமோனியா நோய் நிலைமைக்கு முன்னதாக ஏற்படும் நுரையீரல் சிக்கலானது எக்கியூட் லிம்போஸிட்டிக் இன்ரஸ்ட்ரீஸல் நிவ்மோ நைனடீஸ் என கண்டறியப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுளளார். கொவிட் 19 தொற்றுறுதியாகும் ஆரம்ப காலப்பகுதியிலேயே இந்த நுரையீரல் சிக்கலை முதற்கட்ட அறிகுறியாக அறிந்து கொள்ள முடியும் என தேசிய தொற்றுநோயியல் நிறுவகம் மற்றும் கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் விசேட சட்ட வைத்திய அதிகாரி சன்ன பெரேரா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் விசேட நிதித்திட்டம் ஒன்றை உருவாக்கி அதனூடாக குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# பால்மா கையளிப்பு

தெல்லிப்பழை,ஓக.24

தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையில் உள்ள நோயாளர்களுக்கு வழங்கவென ஒரு தொகை பால்மா வகைகள் அண்மையில் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் நுழைவாயில் லயன்ஸ் கழகத்தினரால் 50 ஆயிரம் ரூபா நிதியில் இந்த பால்மா வகைகள் மருத்துவ பொறுப்பதிகாரியிடம் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளன. (ஐ)






# 76ஆயிரம் பைஸர் தடுப்பூசிகள் நேற்றும் கொண்டு வரப்பட்டன

கொழும்பு, ஓக. 24

76 ஆயிரம் பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்கு நேற்றுக் கொண்டு வரப்பட்டுள்ளன. பெல்ஜியத்திலிருந்து இவை கொண்டு வரப்பட்டுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பொதுமுகாமையாளர் தினுஷ திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஒரு மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் இன்று கொண்டுவரப்படவுள்ளன. அத்துடன், எதிர்வரும் 27ஆம் திகதி மேலும் 2 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளதாக தினுஷ திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரியில் 14 பேருக்கு தொற்று

சாவகச்சேரி, ஓக. 24

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 14 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை 49 பேருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 14 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது. இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை 10 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ-9)

# நடமாடும் தடுப்பூசிச் சேவை கிளிநொச்சியிலும் ஆரம்பம்!



கிளிநொச்சி, ஓக. 24

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வீடுவீடாகச் சென்று தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அனைவருக்கும் தடுப்பூசி எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நடமாடும் சேவை கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டது.

இராணுவத்தினரும், சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து மேற்கொள்ளும் குறித்த வேலைத்திட்டம் ஒரு வாரத்துக்கு இடம்பெறவுள்ளது. ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் 57ஆவது படைப்பிரிவு தலைமையகத்தில் நடைபெற்றது. (ஐ-6)

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# 60 வயதுக்கு மேற்பட்ட 7,000 பேர் தடுப்பூசியைப் பெறவில்லை

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி. ஓக. 24

**கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டோரில் 7 ஆயிரம் பேர் வரை இதுவரை தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான நடமாடும் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று (நேற்று) நடமாடும் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 18 ஆயிரம் பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கின்றனர்.

அவர்களில் ஏறத்தாழ 11 ஆயிரம் பேர் மாத்திரமே தடுப்பூசி பெற்றுள்ளனர். மிகுதியான 7 ஆயிரம் பேர் வரை இதுவரை தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவில்லை.

தடுப்பூசித் திட்டம் ஒரு மாத காலம் நீடித்தும் அவர்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கு வெவ்வேறு காரணங்கள் இருக்கலாம். இந்த நிலையில் இன்றிலிருந்து (நேற்று) ஒரு வார காலத்துக்கு அவர்களின் வீடுகளுக்குச் சென்று இராணுவத்தினரின் உதவியுடன் தடுப்பூசிகளை செலுத்தவுள்ளோம். மாவட்டத்தில் விடுபட்டுள்ள 7 ஆயிரம் பேருக்கும் தடுப்பூசியை செலுத்தும் வரை இத்திட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார். (ஐ-6)

# மயான வீதி சீரமைப்பு

கிளிநொச்சி, ஓக. 24

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் தர்மக்கேணி பொதுமயான வீதி கொங்கிறீட் வீதியாக சீரமைக்கப்பட்டு வருகிறது.

மக்களின் வேண்டுகோளுக்கு அமைய குறித்த வீதி 7 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டு வருகிறது.

சீரமைப்புப் பணிகளை சபையின் தவிசாளர் சு.சுரேன். உப தவிசாளர் கஜன், உறுப்பினர் ரமேஷ் மற்றும் தர்மக்கேணி வட்டார மூத்த உறுப்பினர் தியாகு, சுந்தரலிங்கம் ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர். (ஐ-13)

### மருத்துவ உபகரணக் கொள்வனவுக்கு

# ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் சம்பளத்தை வழங்கத் தீர்மானம்

கொழும்பு. ஓக. 24

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்காக தங்களது சம்பளத்தின் ஊடாக மருத்துவ உபகரணங்களை பெற்றுக்கொடுக்க ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்த விடயத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

'எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக்குழு தனது சம்பளத்தை கொரோனா பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றும் பொருட்டு மருத்துவமனை உபகரணங்களைப் பெற நன்கொடையாக வழங்க முடிவு செய்துள்ளனர்' என்று பதிவிட்டுள்ளார். (ஒ-இ)

# உணவு வழங்கல்

யாழ்ப்பாண நகரப்பகுதியில் உள்ள யாசகர்களுக்கும், யாழ்ப்பாணத்துக்கு வந்து சொந்த ஊர்களுக்கு திரும்பிச் செல்ல முடியாத நிலையில் உள்ளவர்களுக்கும் உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன. வெண்கரம் அமைப்பின் செயலர் மு.கோமகனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர், கிராம அலுவலர் ஆகியோர் இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்தனர். கொட்டடி கற்குளம் பகுதி மக்கள் இந்த உணவுப் பொதிகளை வழங்கி தம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்தனர். (ஐ-27)



# ஒதியமலை கிராமத்துக்கு பஸ் சேவை வேண்டும்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக. 24

முல்லைத்தீவு ஒதியமலைக் கிராமத்துக்கான பஸ்சேவையை விரைவில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஒதியமலைக் கிராமத்தில் தற்போது 80 வரையான குடும்பங்கள் வசித்து வருகின்றன. 1984ஆம் ஆண்டில் இந்தக் கிராமத்தில் இருந்து மக்கள் முழுமையாக [illegible] 2009ஆம் ஆண்டுக்குப் [illegible] ஒதியமலைக் கிராமத்தில் மக்கள் மீளக் குடியேற்றம் செய்யப்பட்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திலும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் நடைபெற்ற கூட்டங்களில் ஒதியமலைக் கிராமத்துக்கு பஸ் சேவை நடத்துங்கள் என கிராமப் பிரதிநிதிகளால் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் தனியார் பஸ்சேவையை ஒழுங்கு செய்த போதிலும் வருமானம் இல்லை என பஸ் சேவை [illegible]வதில்லை.

[illegible] ஒதியமலைக் கிராமத்தில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நெடுங்கேணி பிரதேச மருத்துவமனைக்கு செல்வதற்குக் கூட முடியாத நிலைமை காணப்படுகின்றது. 1984ஆம் ஆண்டுக்கு முன்னர் முல்லைத்தீவு நகரத்தில் இருந்து ஒதியமலைக் கிராமத்துக்கு இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்சேவைகள் நடைபெற்றன. தற்போதைய நிலைமையில் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் ஒன்றினையாவது ஒதியமலைக் கிராமத்துக்கு சேவையில் ஈடுபடுத்துங்கள் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கோரிநிற்கின்றோம் - என்றனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தேவையற்ற நடமாட்டத்தை தவிர்ப்போம்!

சுகாதாரத் துறையினர் எச்சரித்து வந்ததைப் போன்று இப்போது நாடு கொரோனாவின் கோரப் பிடிக்குள் இறுகியிருக்கின்றது. தினசரி இனங்காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து இப்போது தினமும் 4 ஆயிரத்தைத் தாண்டி, 5 ஆயிரம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. உயிரிழப்புகளும் நூற்றுக்கும் அதிகமாக நாளாந்தம் பதிவாகிக் கொண்டிருக்கின்றன.


கோத்தாபய அரசாங்கம், பல்வேறு நெருக்குதல்களுக்குப் பின்னர் 10 நாள் பொது முடக்கம் ஒன்றை அறிவித்திருக்கின்றது. பொது முடக்கம் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதும், நாட்டில் பல்வேறு விடயங்கள் தொடர்ந்து செயற்பட அரசால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. சுகாதாரத் துறையினர் வலியுறுத்தியது இவ்வாறான பொது முடக்கத்தை அல்ல என்கின்றபோதும், அரசு இதனையாவது செய்திருக்கிறதே என்று மகிழ்வடைய வேண்டிய நிலைமையில்தான் இப்போது நாடு இருக்கின்றது.

நாடு முழுமையாக மூடப்படாமைக்கு பொருளாதார நெருக்கடியே காரணம் என்று அரசு கூறியிருக்கிறது. அது ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான காரணம்தான். ஆனால் அரசியல் நோக்கங்களை முன்னிறுத்தி, ஆட்சியிலுள்ள அரசு சரியான முடிவுகளை எடுக்காமையும், ஜனாதிபதி அனைத்தையும் இராணுவமயமாக்கியமையும் இந்த இக்கட்டான நிலைமைக்கு ஒரு காரணம் என்பதையும் மறுத்துவிட முடியாது.

அரசின் செயற்பாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு சில முக்கியமான விடயங்களை ஆராய வேண்டியிருக்கிறது. நாட்டில் இப்போது கொரோனாத் தொற்று நிலைமை மிக ஆபத்தான கட்டத்தில்தான் உள்ளது. சமூகத்துக்குள் பலருக்கும் தொற்று இருக்கலாம் என்ற நிலைமையே இருக்கின்றது.

தற்போது பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்ட போதும், வடக்கு மாகாணத்தில் பொதுமக்களின் அநாவசியமான நடமாட்டங்களை அவதானிக்க முடிகின்றது. அரசு இறுக்கமான பொதுமுடக்கத்தை நடைமுறைப்படுத்தாமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் மக்கள் தற்போதைய நிலைமையின் பாரதூரத்தை விளங்கிக் கொண்டு, அதற்கேற்றவாறு செயற்படுவது அவசியம்.

வடக்கில் பொதுமுடக்க காலத்தில் நடமாடிய பலருக்கு எழுமாற்றுப் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதியாகியிருக்கிறது. தேவையற்ற நடமாட்டங்கள் மூலம் கொரோனா வைரஸ் உங்கள் வீடுகளுக்குள்ளும் நுழைந்துவிட முடியும். இப்போதுள்ள சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் மட்டுமே கொரோனாவின் பரவல் சங்கிலியை உடைக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அதற்கேற்ப செயற்படுங்கள்.



# மோசடியாளர்களுக்குச் சலுகைகள் பொதுமக்களோ வதைபடுகின்றனர்

## கோத்தாபய அரசை போட்டுத்தாக்குகிறார் முன்னாள் எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன்

**கொழும்பு, ஓக. 24**

**சீனி மோசடிக்காரர்களிடம் பணத்தை அறவிடாமல் உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் குறிவைக்கிறது அரசு என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**



அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனிக்கான இறக்குமதி வரியை நீக்கி மக்களுக்கு சலுகை வழங்குவதாக கூறிய அரசாங்கம், நிவாரணத்தை மக்களுக்கு வழங்காமல் தமக்கு இசைந்த வர்த்தகர்களுக்கு சீனி வர்த்தகத்தில் பெருந்தொகை இலாபத்தைப் பெற வைத்தது.

குறித்த வர்த்தகம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்த போதும் சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து எவ்விதமான நிதியும் அறவிடப்படவில்லை. இவ்வாறான நிலையில் தற்போது கொரோனா நிவாரண நிதிக்காக அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் பாதியைத் தருமாறு கேட்க பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. 10 நாள்கள் பொதுமுடக்கம் என அறிவித்துவிட்டு 2 ஆயிரம் ரூபாவை வழங்குவது ஒரு குடும்பத்துக்கு எத்தனை நாள்களுக்கு போதுமானது? - என்றார். (ஐ-20)

# எரிபொருளுக்கு தட்டுப்பாடு யாழ்ப்பாணத்தில் இல்லை!

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தேவையான அளவு எரிபொருள் போதியளவு கையிருப்பில் உள்ளது. எனவே, பொதுமக்கள் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை என யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.



யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தரவின்படி யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தேவையான எரிபொருள் போதியளவு கையிருப்பில் உள்ளது. பொதுமக்கள் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என அச்சமடையத் தேவையில்லை என்று மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் கடந்த வெள்ளிக்கிழமை எரிபொருள் நிரப்பு வதற்காக வரிசையில் காத்திருந்தனர். இது குறித்து எரிபொருள் நிலையத்தினரிடம் கேட்டபோது, எரிபொருளுக்குத் தட்டுப்பாடு இல்லை. மக்கள்தான் தட்டுப்பாடு என்று கூறிக் கதை பரப்பியுள்ளனர். உண்மையில் தட்டுப்பாடு இல்லை என்று தெரிவித்தனர். இந்தநிலையிலேயே, மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (கு-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையிலே 'கப்சிப்' வெளியில் வந்ததும் வீராப்பு

## விமல், வாசு, கம்மன்பிலவுக்கு பெரமுன தரப்பினர் சாட்டையடி

**கொழும்பு, ஓக. 24**

**அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதியால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணக்கத்தை தெரிவித்துவிட்டு, வெளியில் வந்து கூட்டறிக்கைகளை விடுக்கும் பங்காளிக்கட்சிகளின் செயற்பாடு தவறான அணுகுமுறையாகும் -இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் பிரதான பங்காளிக்கட்சியான பொதுஜன பெரமுன கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.**

பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோது, பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும், அமைச்சருமான காமினி லொக்குகே, ஆளுங்கூட்டணில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளை விமர்சித்து கருத்து வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை, தொழிற்சாலைகள் மூடப்படவேண்டும் என எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் அறிவிப்புகளை விடுத்து வருகின்றன. மக்களின் தொழிலையும் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கி பயணிப்பதற்கே அரசு திட்டமிடுகின்றது. எனினும் அரசின் வேலைத் திட்டத்தை குழப்பியடிப்பதற்கு எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் முற்படுகின்றன. இதற்கு இடமளிக்கமுடியாது.

எனினும், எமது அணியிலுள்ள சிலரும் (பங்காளிக்கட்சிகள்) இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் செயற்படுவது கவலையளிக்கின்றது. தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் அமைச்சரவையிலும் இருக்கின்றனர். அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதியுடன் இணங்கிச்செல்கின்றனர். ஆனால் வெளியில்வந்து, நாட்டை மூட வேண்டும் என்றும் கையொப்பமிட்டு கூட்டறிக்கை விடுகின்றனர்.

அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதியிடம் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கலாம். ஆனால் அங்கு கதைப்பதில்லை. வெளியில் வந்து அறிக்கைகள் விடுகின்றனர். இதனால் குழப்பநிலை உருவாகின்றது. பங்காளிக்கட்சிகளின் செயற்பாடுகளால் கவலையடைகின்றோம். அவர்கள் சர்வதேசத்தின் பிடிக்குள் சிக்கிவிட்டனரா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

அதிகாரம் தொடர்பாக அல்ல தற்போதைய சூழ்நிலையில் மக்களைப் பற்றியே சிந்திக்க வேண்டும். கொவிட் பிரச்சினை தீர்ந்த பின்னர் அரசியல் நடத்தலாம்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறியதும், தலிபான்கள் ஆட்சியைப்பிடித்ததுபோல, இங்கும் அவ்வாறு செய்ய முடியும் என சிலர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். சர்வதேசம் இலங்கை மீது கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். சுகாதாரத்தரப்பினரின் ஆலோசனைக்கமைய வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதே எமது நோக்கம். தடுப்பூசி திட்டமும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கு ஒத்துழைப்பு வழங்காமல் மக்களைக் குழப்பும் வகையிலும் பொருளாதாரத்தை சீர்குலைய வைக்கும் நோக்கிலும் எதிர்க்கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் செயற்படுவது வேதனையளிக்கின்றது. என்றார்.

நாட்டை இரு வாரங்களுக்கு முடக்குமாறும் 7 பரிந்துரைகளை முன்வைத்தும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் 10 பங்காளிக் கட்சிகள் கடிதம் அனுப்பின.

அந்தப் பங்காளிக்கட்சிகளுள் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசு தேவ நாணயக்கார, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றனர். சுதந்திரக்கட்சி இந்த அறிக்கையில் கையொப்பமிடவில்லை. (எ-44)

## பிக்குவின் வாகனத்துக்குள் இருந்த மதுப்போத்தல்கள்!

கொழும்பு, ஓக. 24

கண்டியிலுள்ள பிரபல விகாரையின் பிக்கு ஒருவருக்குச் சொந்தமான அதிசொகுசு வாகனத்தில் இருந்தும், வர்த்தகர் ஒருவரின் வாகனமொன்றிலிருந்தும் 145 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மெனிக்ஹின்ன பொலிஸார் தெரிவித்தனர்.

பிக்குவின் வாகனத்திலிருந்து 25 மதுபானப் போத்தல்களும், வர்த்தகரின் வாகனத்திலிருந்து 120 மதுபானப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்து நாள்களுக்கு நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில், ஊரடங்கு காலத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக, இவ்வாறு மதுபானங்கள் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வர்த்தகருக்கு சொந்தமாக மதுபானசாலையொன்று இருக்கின்றமையும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (எ-இ)


## ரிஷாத் பதியுதீனுக்கு சிக்கல் மேல் சிக்கல்!

கொழும்பு, ஓக. 24

விளக்கமறியலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், சிறைச்சாலை மருத்துவமனையின் மருத்துவரைத் திட்டியமை, உயிர் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் உதவி சிறை அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய மகஸின் சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த சந்தேகநபரான ரிஷாத் பதியுதீன், கடந்த 15ஆம் திகதி தன்னைத் திட்டியதாகவும் உயிர் அச்சுறுத்தல் விடுத்தாகவும் மருத்துவரான பிரியங்க இந்துனில் புபுலேவெல வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் வெலிக்கடை பொலிஸில் முறைப்பாடு வழங்கிய மருத்துவர், பின்னர் பொரளை பொலிஸில் கடந்த 21ஆம் திகதி முறைப்பாடு அளித்திருந்தார். (ஒ-இ)



## ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் அலுவலர் கைது

கொழும்பு, ஓக. 24

நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் அலுவலர் ஐஸ் ரக போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக கொச்சிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான 41 வயதுடைய பொலிஸ் அலுவலரிடமிருந்து 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொச்சிக்கடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-இ)

## மங்களவின் உடல்நிலை முன்னேற்றம்

கொழும்பு, ஓக. 24

கொரோனாத் தொற்றுக்குள்ளான முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆபத்தான நிலையில் இருந்து மீண்டு வருவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர் தற்போது கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மங்கள சமரவீரவின் உடல்நிலை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் உண்மைக்கு புறம்பான செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)



## சிமெந்துக்கும் தட்டுப்பாடு; கட்டுமான சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

நாட்டில் சிமெந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று இலங்கை தேசிய கட்டுமான சங்கம் தெரிவித்துள்ளது.


கொரோனாத் தொற்று காரணமாக, சிமெந்து இறக்குமதி செய்வதில் சிக்கல்கள் ஏற்பட்டது என்றும், இந்த சூழ்நிலையால் உள்ளூர் சிமெந்து உற்பத்தியும் தடைபட்டுள்ளது என்றும் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டுமானத் துறையில் சிமெந்து பற்றாக்குறையால், சில வியாபாரிகள் சிமெந்தை அதிக விலைக்கு விற்கிறார்கள் என்று இலங்கையின் தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்தார்.

இதேவேளை, அண்மையில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு காணப்பட்டது. எனினும், இரண்டு எரிவாயு நிறுவனங்களும் தட்டுப்பாடு இன்றி சந்தைக்கு எரிவாயு விநியோகிக்கப்படும் என்று அறிவித்துள்ளன -என்று பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்திருந்தார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுவரெலிய மருத்துவமனையில் மருத்துவர்களுக்கு கொரோனா



கொழும்பு, ஓக. 24

நுவரெலியா பொது மருத்துவமனையில் மருத்துவர்கள் உள்ளிட்ட 23 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

மருத்துவர்கள் 3 பேர், தாதியர்கள் 13, கனிஷ்ட பிரிவு ஊழியர்கள் 7 பேர் என மொத்தமாக 23 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று மருத்துவமனை பணிப்பாளர் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான மருத்துவர்கள், தாதியர் உள்ளிட்ட கனிஷ்ட ஊழியர்கள் சிலர் மருத்துவமனையின் கொரோனா விடுதிகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், குறைந்த அறிகுறிகள் உள்ள சிலர் அவர்களின் வீடுகளிலேயே தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என்றும் மருத்துவமனைப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

தற்போது மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது என்றும், தற்போதுள்ள மருத்துவர்கள், தாதியர்களைக் கொண்டு பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

# தேசிய வேலைத்திட்டமே நெருக்கடிக்கு ஒரே தீர்வு!

### சர்வகட்சி பொறிமுறையை உருவாக்குமாறு அரசிடம் எதிர்க்கட்சி மீண்டும் கோரிக்கை



கொழும்பு, ஓக. 24

**கொரோனா வைரஸ் நெருக்கடி மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள சவால்களில் இருந்து நாட்டு மக்களையும், நாட்டையும் மீட்பதற்கான தேசிய வேலைத்திட்டத்தை அரசு முன்வைக்க வேண்டும். சர்வ கட்சிப் பொறிமுறை ஊடாக அதனை வகுக்க வேண்டும். திட்டங்களை செயற்படுத்துவதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும் - இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் அறிவித்துள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே எதிரணியின் சார்பில் இந்தக் கோரிக்கையை விடுத்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டை முடக்குவதற்கு முன்னர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அந்தத் தேசிய உரை ஊடாக ஜனாதிபதி சில எச்சரிக்கைகளையே விடுத்தார் என்றே கூற வேண்டும். அதாவது எதிர்காலத்தில் பொருள்களின் விலை அதிகரிக்கும், வேலையின்மை பிரச்சினை ஏற்படும், பொருளாதாரம் மேலும் சரியும் என்பதையே அவர் மறைமுகமாகக் கூறியுள்ளார். அவற்றை எதிர்கொள்வதற்குத் தயாராக வேண்டும், தியாகம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் விடுத்துள்ளார்.

இவ்வாறு அறிவிப்புகளை விடுப்பதை விடுத்து நெருக்கடி நிலைமையிலிருந்து மக்களையும் நாட்டையும் மீட்பதற்கான தேசிய வேலைத்திட்டத்தை அரசு முன்வைக்க வேண்டும். அவ்வாறானதொரு திட்டத்தை இணைந்து தயாரிப்போம் எனவும், மக்களை காக்க ஒன்றிணைந்து பயணிப்போம் என்ற கோரிக்கையையும் அரசிடம் விடுக்கின்றோம்.

தேசிய அரசமைக்குமாறோ அல்லது அமைச்சுப் பதவிகளை பகிருமாறோ நாம் கோரவில்லை. சர்வகட்சிப் பொறிமுறையை உருவாக்கி, தேசிய வேலைத்திட்டத்தை வகுக்குமாறுதான் கேட்கின்றோம். அரசியல் நடத்துவதற்கோ அல்லது அரசியல் இலாபம் தேடுவதற்கோ முற்படவில்லை.

ஆனால் தமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது. அதனால் எதிரணிகளின் ஆலோசனைகள் அவசியமில்லை என்ற நிலைப்பாட்டில்தான் இந்த அரசு செயற்படுவதைக் காணமுடிகின்றது. சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகள்கூட ஏற்கப்படுவதில்லை. இனியும் இவ்வாறு செயற்படக்கூடாது. நெருக்கடி நிலைமையை சமாளிப்பதற்கு சர்வகட்சிப் பொறிமுறையும், தேசிய வேலைத்திட்டமுமே சிறந்த வழிமுறையாகும் - என்றார். (எ-44)



## 150 ஆண்டுகள் பழமையான கட்டடம் கொழும்பில் அழிப்பு

கொழும்பு, ஓக.24

கொழும்பு, கொம்பனி வீதியில் உள்ள 150 ஆண்டுகள் பழமையான டி சொய்சா கட்டடம் நகர அபிவிருத்தி ஆணைக் குழுவால் இடிக்கப்பட்டது.

தொல்லியல் துறையின் பணிப்பாளர் ஜெனரல் பேராசிரியர் அனுர மனதுங்கவின், எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இந்தக் கட்டடம் இடித்தழிக்கப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.

150 ஆண்டுகள் பழமையான கட்டடத்தின் ஒரு பகுதி கடந்த ஜூன் மாதம் இடிந்து விழுந்தது. அதையடுத் தற்போது நகர அபிவிருத்தி ஆணைக்குழுவால் கட்டடத்தின் ஏனைய பகுதிகள் இடிக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, இந்தக் கட்டடம் உள்ள பகுதி இந்தியாவின் டாடா வீடமைப்பு அபிவிருத்தி நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளது என்ற தகவலும் வெளியாகியுள்ளது. ஆனால் அது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

பிரபல வர்த்தகரான சாம்ராஸ் ஜோஹியா, இந்தியாவின் டாடா வீடமைப்பு அபிவிருத்தி நிறுவனத்தின் உள்ளூர் முகவராவார். அவர் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேராவின் நெருங்கிய நண்பராக கருதப்படுகிறார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-இ)

## தீவிர சிகிச்சைப் பிரிவுகள் நாடு முழுவதும் நிரம்பின

கொழும்பு, ஓக. 24

நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் கொரோனா நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட தீவிர சிகிச்சை பிரிவுகள் நோயாளர்களால் நிரம்பிவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் சுமார் 186 ஐ.சி.யூ. கட்டில்கள் கொரோனா நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. தற்போது அவை பற்றாக்குறையாக காணப்படுவதனால் ஏனைய நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட 86 தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டில்களும் தற்போது கொரோனா நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஒ.இ)

# நாடு முழுவதும் 900 சோதனைச் சாவடிகள்

கொழும்பு, ஓக.24

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து நாடு முழுவதும் சுமார் 900 பொலிஸ்சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

ஏதேனுமொரு வகையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை ஏற்பட்டால் முப்படையினரின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள இந்தக் காலப்பகுதியில் அத்தியாவசிய பொருள் விநியோகத்துடன் தொடர்புடையவர்கள், தொழிலுக்கு செல்வோர் மற்றும் மருத்துவ தேவை அல்லது மரணவீடுகள் உள்ளிட்டவற்றுக்கு பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட மற்று... ஊடாக ஊரடங்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

ஆவணங்கள் சந்தேகத்துக்கிடமானவை என்று கண்காணிப்புக்களில் ஈடுபடும் பொலிஸார் கருதும் பட்சத்தில் அலுவலகத்திலுள்ள ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தக் கூடிய வசதிகளையும் அலுவலக பிரதானிகள் உத்தியோகத்தர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அறிவு... ...ில் சகல பிரதேசங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஏதேனுமொரு வழியில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை ஏற்பட்டால் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக முப்படையினரின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

எனினும் தற்போது அமுலில் உள்ளது பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அல்ல. இவ்வாறான கண்காணிப்புக்களில் பொலிஸார் ஈடுபடுவது மக்களினதும் சமூகத்தினதும் நலனுக்காகவே என்பதைச் சகலரும் உணர்ந்துகொள்ள வேண்டும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 05 . 1953



மறைவு
21 . 08 . 2021

## செல்லத்துரை ஜோர்ஜ் மகேந்திரன்

(மாட்டீன் றோட்)

யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியை சேர்ந்தவரும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட மகேந்திரன் அவர்கள் கடந்த (21.08.2021) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் தொழிற்சங்கவாதி அமரர் க.செல்லத்துரை (யாழ். கச்சேரி) டெய்சி தம்பதிகளின் அருமைப் புதல்வரும், றோகினியின் அன்புக் கணவரும், கணேசபாலன், அமரர் ஜேந்திரா, சுரேந்திரன், இராஜேந்திரன், இரவீந்திரன், விஜேந்திரன், நரேந்திரன், றஜினி, நாளினி, தர்சினி, லோஜினி, ரூபினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மிதுன்ராஜ், பிருதிவிராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் பொன்னையா அமிர்தலிங்கம், மகேஸ்வரன், அமுதகுமார், செபரெத்தினம், சற்குணநாதன், இலங்கைநாதன், அமரர் ரமேஸ்குமார் நீக்கிலஸ், றஞ்சினிதேவி, மங்களேஸ்வரி, அழகேஸ் (மலர்), பாமினி, தமிழினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.08.2021) திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
001-5796411082

# ஆனந்த பாலித கைதுக்கு சஜித் கடும் கண்டனம்!

கொழும்பு, ஓக. 24

போலியான அறிக்கைகளை வெளியிடுபவர்கள் கைது செய்யப்படுவார்களாயின் அரசில் உள்ள 90 சதவீதமானவர்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். அரசு ஆட்சிக்கு வந்தபின்னர் வெளியிடப்பட்ட பெரும்பாலான அறிக்கைகள் போலியானவையாகும் இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எரிபொருள் பற்றாக்குறை தொடர்பில் கருத்துரைத்த கனிய வளங்கள் முன்னணியின் தொழிற்சங்க ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித கைது செய்யப்பட்டதைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள் ஏதாவது:

அரசின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளுக்கு மக்களின் எதிர்ப்பு வெளியாகியுள்ளதால் அரசு பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்துள்ளது. இதன் ஆரம்பமாகவே தொழிற்சங்கத் தலைவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். நாட்டில் எரிபொருள் பயன்பாட்டுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என கடந்த 8ஆம் திகதி வெளிப்படுத்தினோம் 'எரிவாயு பால்மா வரிசையில் எரிபொருள் வரிசைக்குமா அரசு தயாராகி வருகிறதா?' என்று ஒரு விசேட ஊடக வெளியிட்டை வெளியிட்டோம்.

அதைத் தொடர்ந்து விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் உதய கம்மன்பில தனது ருவிற்றர் பக்கத்தில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படக் கூடும் ஆகவே மக்கள் எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

எரிபொருள் தொடர்பாக இத்தகைய சூழ்நிலை நில வும் போது இத்தகைய கணிப்பைச் செய்த ஆனந்த பாலித கைது செய்யப்பட்டதன் நோக்கம் ஆபத்தானது என்பதில் சந்தேகமில்லை. ஆனந்த பாலிதாவை பொய்யான அறிக்கையை வெளியிட்ட குற்றச்சாட் டில் கைது செய்துள்ள அரசு நினைவில் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. இந்த அரசு ஆட்சிக்கு வந்த நாள் முதல் இன்று வரை வெளியிட்ட பொய்யான அறிக்கைகளை ஆராய்ந்தால் அரசிலுள்ள 90 வீதத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும்.

கைது செய்யப்பட வேண்டியவர்கள் முழுமையான பொய்மையை மற்றும் நம்பகத்தன்மை இல்லாத கருத்தியல்களை வெளிப்படுத்தியவர்கள் அரசில் உள்ளவர்களே தவிர நாட்டுக்கு ஏற்படும் ஆபத்துகள் மற்றும் அவதானங்கள் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்துபவர்கள் அல்லர் என்பதை வலியுறுத்துகிறோம். அதேபோல் இந்தத் தன்னிச்சையான தண்டனை நடவடிக்கைகளுக்கு எங்கள் எதிர்ப்பையும் வெறுப்பையும் வெளிப்படுத்துகிறோம் - என்று குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# மூன்று வாரங்களுக்கேனும் நாட்டை முடக்க வேண்டும்

## நிஹால் அபேசிங்க வலியுறுத்து



கொழும்பு, ஓக.24

**தடுப்பூசி ஏற்றுவது மட்டும் கொரோனா பரவலைத் தடுப்பதற்கான வழி அல்ல. ஆகக் குறைந்தது 3 வாரங்களுக்கேனும் நாடு முடக்கப்பட வேண்டும் என்று தொற்றுநோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது

தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், ஏனையோரை விட தொற்றுக்கு உள்ளாகும் வீதம் 9 மடங்கு அதிகமாகும் என்று ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டோர் தடுப்பூசியை புறக்கணிக்கக் கூடாது. ஆயினும் தடுப்பூசி வழங்குவது மாத்திரமே இதற்கான வழிமுறை அல்ல என்பதால் 3 வாரங்களுக்கேனும் நாடு முடக்கப்பட வேண்டும்.

முடக்கம் தொடர்பான தீர்மானத்தை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும். 3 வாரங்களுக்காவது நாடு முடக்கப்பட வேண்டும். அதன் ஊடாக 10 நாள்களின் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கை, உயிரிழப்புகளின் எண்ணிக்கை மற்றும் தொற்று பரவும் வீதம் என்பவற்றைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (எ-இ)

# ஒட்சிசனுடன் கப்பல் இலங்கைக்கு வந்தது

40 தொன் மருத்துவ தர ஒட்சிசனுடன் மற்றுமோர் கப்பல் இந்தியாவிலிருந்து நாட்டை வந்தடைந்துள்ளது. 'சக்தி' என்ற இலங்கை கடற்படைக்கு சொந்தமான இந்தக் கப்பல் ஒட்சிசனுடன் நேற்று நள்ளிரவு கொழும்பு துறை முகத்தை வந்தடைந்துள்ளது. இந்தக் கப்பல் கடந்த 17ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்திலிருந்து சென்னை துறைமுகம் நோக்கி புறப்பட்டிருந்தது.

இதற்கிடையில் நேற்றுமுன்தினம் மாலை விசாகபட்டினத்திலிருந்து 100 தொன் ஒட்சிசனுடன் இந்திய கடற்படைக் கப்பலான சக்தி கொழும்பை வந்தடைந்திருந்தது. (எ-இ)



# இலங்கையர்கள் இனி டுபாய்க்கு செல்லலாம்

கொழும்பு, ஓக. 24

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து சுற்றுலா விசா பெற்றவர்கள் டுபாய் வருவதற்கு கட்டுப்பாடுகளுடன் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்த 6 நாடுகளை தவிர்த்து வேறு நாட்டில் 14 நாள்கள் தங்கியிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், நைஜீரியா மற்றும் உகண்டா ஆகிய 6 நாடுகளில் கொரோனாப் பாதிப்பு அதிகரித்ததை தொடர்ந்து டுபாய்க்குள் நுழைய பயணிகளுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இதில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தளர்வுகளின் அடிப்படையில் குடியிருப்பு விசா பெற்றவர்கள் கொரோனாப் பரிசோதனை முடிவுகளுடன் முன் அனுமதி பெற்று டுபாய்க்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதில் தற்போது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 6 நாடுகளின் கடவுச்சீட்டு வைத்துள்ளவர்கள் அந்த நாடுகளில் இருந்து சுற்றுலா விசாவில் டுபாய்க்குள் நுழையலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல வெளிநாடுகளில் 14 நாள்கள் தங்கி வருபவர்கள் கட்டாயம் விமானம் புறப்படுவதற்கு 48 மணி நேரத்துக்குள் அந்தந்த நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் எடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளை - ஆங்கிலம் அல்லது அரபில் க்யூ.ஆர் கோட் வசதியுடன் கையில் கொண்டு வரவேண்டும்.

அதேபோல விமான நிலையத்தில் செய்யப்படும் ரபிட் பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளும் கட்டாயமாகும். பிறகு அவர்களுக்கும் டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கிய உடனே மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்படும். இந்தத் தகவலை பிளை டுபாய் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயஸ் கால்வாயில் மீண்டும் எவர்கிவன்

கெய்ரோ, ஓக. 24
சுயஸ் கால்வாயில் சிக்கிய எவர் கிவன் கப்பல் மீண்டும் கால்வாய்க்குள் வந்து சென்றுள்ளது. ஆனால், கால்வாய் ஆணைய அதிகாரிகள் இம்முறை மிகக் கவனமாக செயற்பட்டு கப்பலை வழியனுப்பிவைத்தனர்.

**அந்த 6 நாள்கள்**

தாய்வான் நாட்டைச் சேர்ந்த 'எவர் கிரீன் மெரைன்' என்ற நிறுவனம் இயக்கிவரும் 'எவர் கிவன்' என்ற சரக்குக் கப்பல் கடந்த மார்ச் 23ஆம் திகதி எகிப்தில் உள்ள சுயஸ் கால்வாயின் குறுக்காக சிக்கிக் கொண்டது. தரைதட்டிய கப்பலை மீட்கும் பணி நீண்ட நாள்களாக நடைபெற்றது. 6 நாள்களுக்குப் பின்னர் கப்பல் ஒருவழியாக கால்வாயிலிருந்து மீட்கப்பட்டது. உலகின் மிகப் பெரிய கொள்கலன் கப்பல்களில் ஒன்றான 'எவர் கிவன்' கப்பல் 20 ஆயிரம் கொண்டெய்னர்களை கொண்டு செல்லத்தக்கது. இந்தக் கப்பல் சுயஸ் கால்வாயின் குறுக்கே சிக்கிக் கொண்டதால் பல்லாயிரம் கோடிக் கணக்கான வர்த்தகம் பாதிக்கப்பட்டது.

மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கும் வகையில் எகிப்து நாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் சுயஸ் கால்வாய் உலகின் மிக முக்கியமான கடல் வர்த்தகப் பாதையாக விளங்குகிறது. உலக வர்த்தகத்தின் 12 சதவீதம் இந்தக் கால்வாயின் வழியாக நடைபெறுகிறது.

இந்நிலையில் இந்தக் கால்வாயின் குறுக்காக 'எவர் கிவன்' கப்பல் தரைதட்டிக்கொண்டதால் அந்த வழியாக பிற கப்பல்கள் செல்லமுடியாத நிலை உருவானது. இது உலக வர்த்தகத்தையே ஸ்தம்பிக்கச் செய்தது. கடினமான போராட்டத்துக்குப் பின்னர் இந்தக் கப்பல் மார்ச் 29ஆம் திகதி மீட்கப்பட்டது.

**மீண்டும் வந்த கப்பல்**

இந்த நிலையில், இந்தக் கப்பல் கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் சுயஸ் கால்வாய்க்கு வந்தது. இந்த முறை எவர்கிவன் வரும் முன்னரே பல்வேறு நடவடிக்கைகளை கால்வாய் ஆணையம் மேற்கொண்டிருந்தது.

பிரிட்டனிலிருந்து சீனா நோக்கி வந்த எவர்கிவன் கப்பல் எந்த சிக்கலும் இல்லாமல் சுயஸ் கால்வாயைக் கடந்தது. கப்பல் கால்வாயைக் கடக்கும் வரை அனைவரும் திக்திக் நிமிடங்களில் உறைந்திருந்தனர். எவர் கிவன் கப்பல் சுயஸ் கால்வாயைக் கடந்து செல்வது இது 22ஆவது முறை என்பது குறிப்பி டத்தக்கது. (ம)

### படைகளை திரும்பப் பெற்ற விவகாரம்

# முடிவு சரியானதே பைடன் விடாப்பிடி



**வொஷிங்டன், ஓக. 24**

**ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில், அங்கிருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெற்ற விவகாரம் சரியானதுதான் என்று அமெரிக்க அதிபர் பைடன் மீண்டும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறுவது தர்க்கரீதியான, பகுத்தறிவு மற்றும் சரியான முடிவு. இந்த முடிவை வரலாறு பதிவு செய்யும். தலிபான்கள் சிறந்த முடிவை எடுக்க வேண்டும். இதற்கு முன் எந்த பயங்கரவாத அமைப்பும் செய்யாத, ஒருங்கிணைப்பு மற்றும் ஆப்கானிஸ்தான் மக்களுக்கு நல்வாழ்வு வழங்கும் செயலை தலிபான்கள் செய்வார்களா?. அவ்வாறு செய்தால், அதற்கு கூடுதல் உதவி, பொருளாதார உதவி, வர்த்தகம் மற்றும் முழு அளவிலான விஷயங்கள் தேவை.

மற்ற நாடுகள் எங்களை அங்கீகரிக்கிறார்களா? என்று பார்க்கிறார்கள். அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் தூதரக நட்பை முறிக்க வேண்டாம் என்று கூறுகிறார்கள். இது எல்லாம் அவர்களின் தற்போதைய பேச்சுதான். அவர்களுடைய படைகளை அவர்களால் கட்டுக்குள் வைக்க முடியாது என்பதை நான் உறுதியாக கூறுகிறேன். அவர்கள் சொல்வது உண்மையா? இல்லையா? என்று பார்ப்போம்" என்றார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர், நீங்கள் தலிபான்களை நம்புகின்றீர்களா? என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பதில் வழங்கிய பைடன், நான் உங்களைக்கூட நம்ப மாட்டேன். நான் அவ்வளவு இலகுவில் யாரையும் நம்புவதில்லை. ஆனால், உங்களை நேசிக்கின்றேன் - என்றார். (ம)



# ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, ஓக. 24
ஜப்பானில் அணுவுலைகள் அமைக்கப்பட்டுள்ள புகுஷிமா பகுதியில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. எனினும் இந்த நிலநடுக்கத்தால் எந்த ஆபத்தும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் புகுஷிமா பகுதியில் உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 11.21 மணிக்கு நிலடுக்கம் ஏற்பட்டுள்ளது. 60 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.2 அலகுகளாகப் பதிவாகியுள்ளது. புகுஷிமாவின் நான்கு இடங்களில் நிலஅதிர்வு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை. (ம)



# டெல்டாவை அழித்தது சீனா!

பீஜிங், ஓக. 24
சீனாவில் இருந்து கொரோனாத் திரிபான டெல்டா அழிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வுகான் மாகாணத்தில்தான் கொரோனா முதன்முதல் தோற்றம் பெற்றது. அதன் பின்னர் அங்கிருந்து உலக நாடுகளுக்குப் பரவியது. எனினும், முன்னனுபவம் இல்லாத நிலையிலும் கொரோனாவை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியது சீனா.

இந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் நாஞ்சிங் என்ற மாகாணத்தில் கொரோனாவின் டெல்டா திரிபு சிலருக்கு அவதானிக்கப்பட்டது. இதையடுத்து கொரோனா கட்டுப்பாடுகளை துரிதகதியில் மேற்கொண்ட சீன சுகாதாரத்துறை தற்போது நாட்டில் இருந்து டெல்டா திரிபை முழுவதுமாக விரட்டியுள்ளது.

அத்துடன் சீனாவில் கடந்த ஒரு மாதத்தில் கொரோனா அவதானிக்கப்படாத நாளாக நேற்றுமுன்தினம் அமைந்துள்ளது. (ம)




ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களிடம் இருந்து தப்பி வந்துள்ள யுவதியொருவர் காபூல் விமான நிலையத்தில் அமெரிக்கப் படையினரிடம் அடைக்கலம் புகுந்துள்ளார். அவரை இராணுவ வீராங்கனையொருவர் வரவேற்கின்ற ஒளிப்படமே இது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தில் : எரிக் நாகோர்ணி –
நன்றி : தி இந்தியன் எக்ஸ்பிரஸ்
தமிழில் : மோகன் வயித்திலிங்கம்.

(நேற்றைய தொடர்ச்சி)



# யார் இந்த தலிபான்கள்? அவர்களுக்கு என்ன வேண்டும்?

**2001 தோல்விக்குப் பிறகு தாலிபான்களுக்கு என்ன நடந்தது?**

பாகிஸ்தான் இராணுவத்தின் உதவியுடன் அல்கொய்தாவை வேட்டையாட ஒரு கொரில்லா கிளர்ச்சிப் படையாக தலிபான் சீரமைக்கப்பட்டது. அதற்கு அமெரிக்காவிலிருந்து அதிக நிதி உதவியும் பெறப்பட்டது. அதே சமயம் ஈராக்குக்கு எதிரான ஒரு புதிய யுத்தத்துக்கு அமெரிக்கா தயாரானது. தமது யுத்த வளங்களை அங்கே கொட்டத் தொடங்கியது. மேலும் ஆப்கானிஸ்தான் மேற்கத்திய பாணியிலான ஒரு புதிய ஜனநாயக நாடாக மாறிவருவதாகவும் அதற்காகப் பல நவீன தொழில் நுட்பம் தெரிந்த அதிகார நிறுவனங்களை உள்ளடக்கிக் கொள்வதாகவும் அமெரிக்க அதிகாரிகள் உலகுக்கு பிரசாரத்தை மேற்கொண்டனர். ஆனால் அந்த வெளிநாட்டு நிறுவனங்கள் தமது வளங்களைக் அபகரிப்பதற்காக உள் நுழைய இதனை மற்றொரு மாற்று வழியாகக் கைக்கொள்வதாகப் பல ஆப்கானியர்கள் உணர்ந்துகொண்டிருந்தனர்.

கிராமப்புறங்களில், தலிபான்கள் குறிப்பாக கிராமப்புறங்களில் ஆதரவையும் அனுசரணைகளையும் பெறத் தொடங்கினர். அவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது சில போராளிகள் சேர மிரட்டப்பட்டனர், மற்றவர்கள் தன்னார்வத் தொண்டு செய்வதில் மகிழ்ச்சியடைந்தனர். கிட்டத்தட்ட அனைவரும் உள்ளூர் பொலிஸ்காரர்களை விடச் சிறந்த ஊதியம் பெறுகிறார்கள். பாகிஸ்தானில் உள்ள புலம்பெயர்ந்த ஆப்கானியர்கள் மத்தியில் இருந்தும், முந்தைய வன்முறையில் அகதிகளாகத் தப்பித்துச் சென்றவர்கள் மத்தியில் இருந்தும் , மதப் பள்ளிகளில் வளர்க்கப்பட்ட குடும்பங்களிலிருந்தும் தமது நடவடிக்கைகளுக்காக ஆட்களைச் சேர்க்கலாம் என்றும் அவர்கள் கண்டறிந்தனர். "அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்டு


**தலிபான் படைகள் முன்னேறிக் கொண்ட சமயம் காபூலில் உள்ள அகதிகளிடையே கொடூரம் மற்றும் மிரட்டல் நடைபெற்றது பற்றிய போதுமான தகவல்கள் வெளிவந்துள்ளன. இப்போது, தலைநகரின் விமான நிலையம் விரக்தி மற்றும் குழப்பத்தின் காட்சியாக மாறியுள்ளது, ஏனெனில் ஆயிரக்கணக்கான ஆப்கானியர்கள் எந்த விலை கொடுத்தும் நாட்டை விட்டு வெளியேற முயற்சி செய்து வருகிறார்கள்.**



ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, தலிபான்கள் ஒரு நெகிழ்ச்சியையும் தீவிரத்தையும் காட்டுகின்றனர்," என்று ரைம்ஸ் 2008 இல் தெரிவித்தது.

" 2010 இல் ஜனாதிபதி பராக் ஒபாமா ஆப்கானிஸ்தானில் காணப்பட்ட அமெரிக்க இராணுவ முன்னிலைக்குச் சுமார் 100,000 துருப்புக்களை அனுப்பி அதனை விரிவுபடுத்தினார். அதனால் தலிபான்கள் ஒரு பெரும் புயலை எதிர்கொண்டனர். மேலும் சில வருடங்களுக்குப் பிறகு அமெரிக்கர்கள் வெளியேறத் தொடங்கியபோது, கிளர்ச்சியாளர்கள் மீண்டும் பலம் பெறத் தொடங்கினர். தலிபான்களின் விடாப்பிடியான நடவடிக்கைகளால் அமெரிக்கா பொறுமையை இழந்து வெளியேறும் என்று தலிபான்கள் பந்தயம் கட்டினர். அவர்கள் பந்தயம் நிதர்சனமானது. 2,400 க்கும் மேற்பட்ட அமெரிக்க உயிர்கள் காவு





கொள்ளப்பட்ட பின், 2 டிரில்லியன் டொலரை அமெரிக்கா இழந்த பின், பல்லாயிரக் கணக்கான ஆப்கான் பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் இறந்த பின் 2021 நடுப்பகுதியில் அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறுவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலிபான்களுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்.

அதற்குத் தற்போது ஜனாதிபதி ஜோ பைடன் ஒப்புதல் அளித்துள்ளார். அதற்கிடையில் தலிபான்கள் முழு மாவட்டங்களையும், பின்னர் நகரங்களையும் ஆக்கிரமிக்கத் தொடங்கினர். அமெரிக்கப் படைகள் விலகத் தொடங்கியதும் இந்த வாரம், தலிபான்கள் தங்கள் முதல் மாகாணத் தலைநகரைக் கைப்பற்றிய ஒன்பது நாட்களுக்குப் பிறகு, கிளர்ச்சியாளர்கள் தலைநகர் காபூலுக்குள் நுழைந்தனர். ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி மீண்டும் தொடங்கியுள்ளது.

**அடுத்து தலிபான்களின் நடவடிக்கை என்னவாக இருக்கும்?**

தலிபான்கள் முன்போலல்லாது தற்போது மாறிப் போயிருக்கிறார்கள். தற்போது தலிபான் தலைவர்கள் கடுமைமிக்க சொற்பொழிவுகளைத் தவிர்ப்பதாகத் தெரிகிறது. மேலும் தமது தளபதிகளை நியாயமாக ஆட்சி செய்யவும் பழிவாங்கல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களைத் தவிர்க்கவும் அறிவுறுத்தியுள்ளனர். தமது நிர்வாகத்தில் மக்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று அவர்கள் உறுதி அளித்துள்ளனர் என்று சொல்லப்படுகிறது.

ஆனால் தொடக்கத்தில் சில இடங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபோது தலிபான்கள் பல தடை உத்தரவுகளைப் பிறப்பித்து மக்களோடு கடுமையாக நடந்து கொண்டதாகத் தெரிகிறது. தலிபான் படைகள் முன்னேறிக் கொண்ட சமயம் காபூலில் உள்ள அகதிகளிடையே கொடூரம் மற்றும் மிரட்டல் நடைபெற்றது பற்றிய போதுமான தகவல்கள் வெளிவந்துள்ளன.

இப்போது, தலைநகரின் விமான நிலையம் விரக்தி மற்றும் குழப்பத்தின் காட்சியாக மாறியுள்ளது, ஏனெனில் ஆயிரக்கணக்கான ஆப்கானியர்கள் எந்த விலை கொடுத்தும் நாட்டை விட்டு வெளியேற முயற்சி செய்து வருகிறார்கள்.

தலிபான்கள் பிடித்த முதல் பெரிய மாகாணத்தின் தலைநகரான குண்டூஸில், தங்கள் புதிய ஆட்சியாளர்கள் கொடுத்த சமாதான வாக்குறுதிகளைத் தாம் நம்பவில்லை எனத் தெரிவித்த ஒரு குடியிருப்பாளர் "நான் பயப்படுகிறேன், ஏனென்றால் என்ன நடக்கும், அவர்கள் என்ன செய்வார்கள் என்று எனக்குத் தெரியாது, நாங்கள் அவர்களைப் பார்த்து புன்னகைக்க வேண்டும், ஏனென்றால் நாங்கள் பயப்படுகிறோம், இருந்தும் மிகவும் மகிழ்ச்சியற்றவர்களாக நாம் இருப்பது எமக்கு மட்டுமே தெரிகிறது." எனவும் சொல்லி இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பங்காளிக்கட்சிகள் சூழ்ச்சி பதறுகின்றது மொட்டு கட்சி

## விசாரணையை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 24

**ஆளுங்கூட்டணியிலுள்ள பங்காளிக்கட்சிகள் ஏதேனும் சூழ்ச்சி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனவா என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாப ராஜபக்சவிடம் பொதுஜன பெரமுன வேண்டுகோள் விடுத்துள்ளது.**

பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டை முடக்குவதில்லை என கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கு ஆதரவாக கை உயர்த்திய அமைச்சர்கள் சிலர், வெளியில் வந்து நாட்டை முடக்க வேண்டும் என ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்புகின்றனர்.

எந்த அடிப்படையில் இவ்வாறு நடக்கின்றது, எவ்வாறான சூழ்ச்சி முன்னெடுக்கப்படுகின்றது என்பது தொடர்பில் விசேட விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கின்றோம். இது முதன்முறை அல்ல. இதற்கு முன்னரும் அமைச்சரவையில் இணக்கம் தெரிவித்துவிட்டு, வெளியில் வந்து அறிக்கைகள் விடப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இது அரசை நெருக்கடிக்குள் தள்ளுகின்ற தவறான செயலாகும். கூட்டணி அரசில் உள்ள கட்சிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

ஜனாதிபதியிடம் சந்திப்பொன்றைக் கோரி, கூட்டு முடிவொன்றை எடுத்திருக்க வேண்டும். அதைவிடுத்து கூட்டுப்பொறுப்பைமீறும் வகையில் ஊடக அறிக்கை விடுவது கீழ்த்தரமான செயலாகும். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அமைச்சரவையில் கதைப்பதற்கு முதுகெலும்பில்லாமல், வெளியே வந்து அறிக்கை விடுகின்றனர். ஜனாதிபதிக்கு கிடைப்பதற்கு முன்னர் ஊடகங்களுக்கு அனுப்புகின்றனர். இது சர்ச்சைக்குரிய விடயமாகும். இது விடயம் தொடர்பில் ஜனாதிபதி கடுமையான தீர்மானமொன்றை எடுக்க வேண்டும். -என்றார். (எ-44)

---

தொற்றுக்குள்ளான கர்ப்பிணிகளின்

## பிரசவத்துக்காக சிகிச்சை அறை

கொழும்பு, ஓக. 24

கொரோனாத் தொற்று உறுதியான கர்ப்பிணித் தாய்மார்களின் பிரசவத்துக்காக பல மருத்துவமனைகளில் தனியான சிகிச்சை அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று குடும்ப நல சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதன் பணிப்பாளர் விசேட மருத்துவர் சித்ரமாலி டி சில்வா இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது

கர்ப்பிணித் தாய்மார்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை. இதுவரையில் 3 ஆயிரத்து 800 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

அவர்களில் 850 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேநேரம், சில கர்ப்பிணித் தாய்மார்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். -என்று தெரிவித்தார். (எ-இ)

---

## மட்டக்களப்பில் 10 பேர் 24 மணி நேரத்தில் பலி

கொழும்பு, ஓக. 24

மட்டக்களப்பில் நேற்றுடன் முடிந்த 24 மணித்தியாலங்களில் மருத்துவமனை சிற்றூழியர் உட்பட 10 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 182 ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

---

## இந்தியத் தூதுவரை சந்தித்தார் பீரிஸ்

கொழும்பு, ஓக. 24

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு இந்தியாவிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்புகளுக்கு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நன்றி தெரிவித்தார் என்று வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியக் கடற்படைக்கு சொந்தமான கப்பலை பயன்படுத்தி இலங்கைக்கான ஒட்சிசனை அனுப்பி வைத்தமைக்கும் இதன்போது அமைச்சர் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார். 2016ஆம் ஆண்டு இறுதியாக கூடப்பட்ட இந்து - லங்கா ஒன்றிணைந்த ஆணைக்குழுவை மீண்டும் விரைவில் கூட்டுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது -என்று வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

---

## 2,222 பேர் நேற்று குணமடைவு

கொழும்பு, ஓக. 24

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 2 ஆயிரத்து 222 பேர் குணமடைந்து நேற்றுத் திங்கட்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். அதையடுத்து, நாட்டில் வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 44 ஆயிரத்து 381ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் 3 இலட்சத்து 90 ஆயிரம் பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேநேரம், தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 366ஆக அதிகரித்துள்ளது. (எ-இ)

---

## சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து சிமெந்துக் கற்கள் உருவாக்கம்

முல்லைத்தீவு, ஓக. 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆற்றுப் படுகைகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து சிமெந்து கற்கள் (கொங்கிறீட் கல்) செய்யப்பட்டு வேறு இடங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்று பொது அமைப்புக்கள் குற்றம்சாட்டியுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மாவட்டத்தின் ஆற்றுபடுகைகளில் இருந்து தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெற்று வரும் நிலையில் பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் தற்போது புதிய யுக்தியாக ஆற்றுபடுகைகளுக்கு சிமெந்து பைக்கற்றுகளை கொண்டு சென்று அங்கு வைத்து கற்கள் அரிந்து அவற்றினை டிப்பர்களிலும் வேறு வாகனங்களிலும் வெளி இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர்.

மணல் கொண்டு சென்றால்தானே பிரச்சினை ஏற்படும் என்று கருதி புதிய உத்தியைக் கையாண்டு கற்கள் செய்து விற்கின்றனர்.

இது தொடர்பாக கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. -என்றனர். (ஐ-13)

---



## ஆவணி விதைப்பு நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஓக. 24

சாவகச்சேரி மறவன்புலவுப் பகுதியில் ஆவணி பெரும்போக நெல் விதைப்பு அருள்மிகு வல்லைக்குளப்பிள்ளையார் கோயில் நிலத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதற்கான ஆரம்ப நிகழ்வை சிவசேனை மறவன்புலவு க.சச்சிதானந்தன் ஆரம்பித்து வைத்தார். (ம-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



மூத்த சட்டத்தரணியும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவருமான **கே.வி.தவராசாவின்** மனைவி

மூத்த சட்டத்தரணி

## கௌரிஷங்கரி தவராசா

காலமான செய்தி கேள்வியுற்று ஆழ்ந்த துயரடைகின்றோம்.

தமிழ் மக்களுக்கு எதிரான பல்வேறு வழக்குகளில் முன்னிலையாகி நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் அன்னார் தீவிர பங்காற்றியவர். அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி, தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கைத் தமிழரசுக் கட்சி,**
**யாழ்ப்பாண மாவட்டக் கிளை**


# சட்டத்தரணி கௌரியின் இழப்பை இலகுவில் ஈடுசெய்ய முடியாது

## மாவை சோ. சேனாதிராசா இரங்கல்

யாழ்ப்பாணம், ஓக. 24

மூத்த சட்டத்தரணி திருமதி கௌரிசங்கரியின் இழப்பை இலகுவில் ஈடுசெய்ய முடியாது. இளைஞர்கள் மற்றும் அரசியல் ரீதியான வழக்குகளில் குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தில் இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் தவராசாவின் வாதங்களுக்கு பக்கபலமாக இருந்தவர் கௌரி. அப்படிப்பட்ட ஒருவர் இன்று காலமாகிவிட்டார் என்ற செய்தி எமக்கு மிகுந்த துயரத்தையும் துக்கத்தை யும் தருகிறது.

இவ்வாறு, தமிழ் அரசுக் க்ட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா விடுத்த இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவின் துணைவியார் மூத்த சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா இறந்த செய்தி கேட்டு மிகுந்த துயரடைகின்றோம்.

கௌரிசங்கரி தவராசா, உச்சநீதிமன்றத்தில் வழக்குகளை நடத்துவதில் தேர்ச்சி பெற்றவர், நிறைய வழக்குகளில் வெற்றியும் பெற்றவர்.

இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளில் கௌரி சங்கரியின் வாதத்தால் பலர் விடுதலை பெற்றிருக்கின்றார்கள்.

சட்டரீதியாக உச்சநீதிமன்றத்தில் வாதாடக்கூடிய ஓர் ஆற்றல் நிறைந்தவராக விளங்கி வந்திருக்கின்றார். அதைவிட எங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்ந்தும் தவராசாவுக்கும் நீதிமன்ற நடவடிக்கைகளிலும் பொது நிகழ்ச்சிகளிலும் அவர் உதவியாக இருந்து வந்திருக்கின்றார்.

அவரை நாங்கள் இப்பொழுது இழந்திருக்கின்றோம். கொரோனா வைரஸால் தவராசாவுக்கும் அவருடைய துணைவியார் கௌரிசங்கரி அவர்களும் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு இருக்கின்றார்கள் என்ற செய்திக்குப் பின்னே கௌரி உயிர் பிரிந்து விட்டார் என்ற செய்தி மிகுந்த கவலையைத் தருகின்றது. எங்களுடைய ஆழமான துன்பத்தையும் துயரத்தையும் அவருக்கு அஞ்சலியாக செலுத்த வேண்டிய கடமைப்பாடு எங்களுக்கு இருக்கின்றது. தவராசாவுக்கு ஏற்பட்ட இழப்பும் நாங்கள் ஈடுசெய்யமுடியாதது.

நாம் நேரடியாக அவருடைய இறுதி நிகழ்வில் கலந்துகொள்ள முடியாமல் இருக்கும் என்ற எண்ணம் நமக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றது. இருந்தாலும் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்பிரார்த்திக்கின்றோம். அத்துடன் நாங்கள் தவராசா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். - என்றுள்ளது. (த-319)


# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 18 | | 22 |
| 10 | | 08 |
| 1964 | | 2021 |



## திருமதி ஜெயராணி (ஜெயா) சிவமோகன்

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பு மோதரையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராணி (ஜெயா) சிவமோகன் கடந்த (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அமிர்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், சிவமோகனின் (குலம்) அன்பு மனைவியும், கபிசன், காலஞ்சென்ற திவானியின் அன்புத் தாயாரும், இராஜகுலசிங்கம் (ஜேர்மன்), பத்தராஜசிங்கம் (மன்னார்), தேவராணி (யாழ்ப்பாணம்), பத்மராணி (கொழும்பு), மோகனராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கவுரி, கனகேஸ்வரி, தியாகலிங்கம், ரவீந்திரன், கைலைவாசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.08.2021) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சகோதரி - தேவராணி**
**மைத்துனர் - தியாகலிங்கம்**

**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**077 116 3105**



# துயர் பகிர்தல்



மூத்த சட்டத்தரணியும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவருமான **கே.வி.தவராசாவின்** மனைவி

மூத்த சட்டத்தரணி

## கௌரிஷங்கரி தவராசா

காலமான செய்தி கேள்வியுற்று ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னார் தமிழ் மக்களுக்காக ஆற்றிய சேவைகள் அளப்பரியவை. பேரினவாத அரசுகளின் அடக்குமுறைக் கரங்கள் தமிழ் மக்களை நசுக்கிய வேளைகளில் தனது சட்டப் புலமை ஊடாக அவற்றுக்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட்டவர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் போர்வையில் சிறைகளில் அடைக்கப்பட்டு, கொடுமைகளுக்கு உள்ளான பலரின் விடுதலைக்கு முன்னின்று உழைத்தவர்.

உதயன் அடக்குமுறைக்கு உள்ளான பல சந்தர்ப்பங்களில் தோளோடு தோள் நின்று செயற்பட்டவர். பல்வேறு சந்தர்ப்பங்களில் உதயனுக்காக நீதிமன்றங்களில் வாதாடி உண்மையை வெளிக்கொணர்ந்தவர். அன்னாரின் இழப்பு தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கெடுப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**உதயன் குழுமம்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் நிலையத்துக்கு வந்தோருக்கும் தொற்று!

கொழும்பு, ஓக.24

கல்முனை பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் மற்றும் அங்கு பல்வேறு தேவைகளின் நிமித்தம் வந்திருந்த பொது மக்கள் உட்பட 100 பேருக்கு நேற்று அன்டிஜென் பரிசோதனை மேற்கொள் ளப்பட்டது.

அதில் பொதுமக்கள் மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக கல்முனை தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்தார். (ஏ-இ)

# விதிகளை மீறிய 502 பேர் கைது

கொழும்பு, ஓக.24

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் மொத்தம் 502 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுக்காக இதுவரை மொத்தம் 56 ஆயிரத்து 796 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்துக்குள் நுழையும் மற்றும் வெளியேறும் பகுதிகளில் அமைக் கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளில் நேற்றுமுன்தினம் மொத்தம் 757 வாகனங்களில் பயணித்த ஆயிரத்து 509 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-இ)


## 4ஆம் ஆண்டு நினைவில்...



**விஜயரட்ணம் சுதாகரன்**

தோற்றம் 12.08.1967 — மறைவு 09.08.2017

திதி: ஆடித் தேய்பிறை துதியை

ஈன்றவள் மடியில் தனியே உதித்து
ஈசன் அடியை விரைந்தே பிடித்த
நேசன் நினைவில் இறையைத்
- துதித்தோம்
சிவமே சேர்ந்தோனுக்கு
- அகமுருக அஞ்சலிகள்

பழைய வீதி, கோப்பாய். — தாய், மனைவி, பிள்ளைகள்



## சைவ வித்தியா விருத்தி சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்டம்-2021

28.08.2021 இல் நடைபெற விருந்த ஆண்டுப் பொதுக் கூட்டம் ஊரடங்கு காரணமாக பிற்போடப் பட்டுள்ளது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப் படும்.

லோ.துஷிகரன்
செயலாளர்.



## நிதி அமைச்சு
### ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை

## 2021 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டுக்கான படிவம் II அறிக்கை (பங்களிப்புத் தொகை விபரம்) சமர்ப்பித்தல்

**யாருக்கு ஏற்புடையது** — ஆர்-1 பணம் அனுப்பும் படிவத்தின் மூலம் பங்களிப்புத் தொகை செலுத்தும் தொழில் வழங்குநர்கள்

**இறுதித் திகதி** — 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர்

**ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்**
- சரியாக மற்றும் தெளிவாக பூரணப்படுத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டு அறிக்கை (படிவம் II)
- சாராம்சப் பக்கங்கள்
- இணக்கக் கூற்றுக்கள்

**தங்களது விசேட கவனத்திற்கு**

1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சட்டத்தின் மற்றும் 1993ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் பிரகாரம் முழுமையான மற்றும் சரியான அறிக்கைகளை உரிய தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் அறிக்கைகளுக்கு தாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்காக அறிக்கையில் குறிப்பிடப்படும் ஆறுமாத மொத்தப் பங்களிப்புத் தொகையிலிருந்து 1% தண்டப்பணமாக தொழில் வழங்குநர்களினால் செலுத்த நேரிடும் என்பதையும் தயவுகூர்ந்து கவனத்திற்கொள்ளவும்.

**அறிக்கைகளை ஒப்படைக்க முடியுமான அலுவலகங்கள்**

★ பிரதான அலுவலகம்

முகாமையாளர் - அங்கத்துவக் கணக்கு பாரிய வகை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
20ம் மாடி, மெகெவர பியெஸ,
நாராஹேன்பிட்டி, கொழும்பு 05.

தொ.இல.: 0117 747216
பெக்ஸ்: 0112 369779

★ கண்டி பிராந்திய அலுவலகம் (D, E,F) உள்ள ஊ.சே.நி இலக்கங்களுக்கு

பிராந்திய முகாமையாளர் - கண்டி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
இல.79, வீடமைப்புச் செயலகம்,
யட்டிநுவர வீதி, கண்டி

தொ.இல.: 081 2232446
பெக்ஸ்: 081 2233793

★ கொழும்பு கோட்டை அலுவலகம்

ஊ.ந.பொ.நி. அலுவலகம்
இல. 85, சீ பேன்க்,
ஹேமாஸ் கட்டிடம், யோர்க் வீதி,
கொழும்பு 01.

தொ.இல. : 0112 321184
பெக்ஸ் : 011 2321184

★ மாத்தறை பிராந்திய அலுவலகம் (G,H,W) உள்ள ஊ.சே.நி.இலக்கங்களுக்கு

பிராந்திய முகாமையாளர் - மாத்தறை
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
இல.63/2, காலிதாஸ் வீதி,
மாத்தறை

தொ.இல. : 041 2237607
பெக்ஸ் : 041 2231877

தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19.07.1971 — மறைவு 05.09.2020



**வன்னியசிங்கம் இராஜேஸ்கண்ணா**

என் அன்பு மகன், ஆசை மகன்
என் செல்ல மகன், என் செல்வமே
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உங்களை நாங்கள் மறக்க மாட்டோம்.

உன் நினைவால் வாடும்
அப்பா, அம்மா,
மனைவி, மகள் (லண்டன்),
அண்ணா, அண்ணி, பெறாமகள் (கனடா),
தங்கை, மைத்துனர், மருமக்கள் (லண்டன்)
வன்னியசிங்கம் குடும்பத்தினர்
077 2198 518

ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.



## மரண அறிவித்தல்

பிறப்பு 06.10.1933 — இறப்பு 23.08.2021



**வயித்தி அம்பலம்**

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் கலைமகள் வீதி, தையிட்டி மற்றும் சுதுமலை தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்தி அம்பலம் அவர்கள் நேற்று (23.08.2021) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வயித்தி - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், கார்த்திகேசு – செல்லம் தம்பதிகளின் மருமகனும், இரத்னாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு, சின்னாச்சி, தெய்வானை, தங்கம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சாரதாதேவி, புஷ்பாதேவி, ரதிதேவி, விஜயராகவன், விஜயநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன், சௌந்தரநாயகம், இராசதுரை, தயாநிதி, சுதாமதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரூபிகா, கபிலன், கலாநிதன், யதீஸ், கோபிநாத், செந்தூரன், துவாரகா, கோதையன், அபராஜிதன், ஆரபி ஆகியோரின் அன்புப் பேரனும், தீரனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (23.08.2021) நடைபெற்று பிப்பிலி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயில் வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். 0779228948

தகவல்: மகன் அ.விஜயநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIRTUAL INTERVIEW [VIA ZOOM]
## Global NIHR - AF Project, Faculty of Medicine, University of Jaffna.

**Post of Coordinator for Data Collection & Data quality, Data Collector, Phlebotomist, Medical Laboratory Technician and Computer operator (Full Time, on Contract Basis)**

University of Jaffna, Sri Lanka has embarked on a medical research programme on Global Health Research under Atrial Fibrillation Management Project in partnership with University of Birmingham, UK Funded by National Institute of Health Research (NIHR), UK.

**01. Coordinator – Data Collection & Data quality**
**Vacant – 01 post**
**Requirements:**
- MBBS or Bachelor degree in indigenous medicine (BSMS, BAMS, and BUMS) or Bachelor degree in Allied Health Sciences or other equivalent qualification from UGC approved University / HEI. (Those who are waiting for the final results also can apply).
- At least 1 year working experience in health-related research data collection & data quality.
- Preference will be given to those who have experience in data analytical skill with the ability to collect, organize, analyze and disseminate significant amounts of information with attention to detail and accuracy, knowledge of statistics and experience using statistical packages for analyzing datasets.

**Remuneration:** A monthly salary of LKR 45,000.00 will be paid.

**02. Data Collector**
**Vacant – 20 posts**
**Requirements:**
- MBBS or Bachelor degree in indigenous medicine (BSMS, BAMS, and BUMS) or Bachelor degree in Allied Health Sciences or other equivalent qualification from UGC approved University/ HEI. Those who are waiting for the final results also can apply.
- Proven working experience in health research related data collection and clinical medicine.
- Ability to handle e-based data collections.

**Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.

**03. Phlebotomist**
**Vacant – 2 posts**
**Requirements:**
- Experience in blood withdrawing especially using vacutainer technique.
- Preference will be given to those who have experience in using computers for variety of tasks, labeling of samples, waste disposal using standard professional competencies and both health & research filed.

**Remuneration:** A monthly salary of LKR 30,000.00 will be paid.

**04. Medical Laboratory Technician**
**Vacant – 2 posts**
**Requirements:**
- Work experience in maintain good laboratory practice, centrifuging, preparation, pipetting, labeling and storing of bio samples using standard professional competencies.
- Preference will be given to those who are having experience in using computers for variety of tasks and both health & research filed.

**Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.

**05. Computer operator**
**Vacant – 2 posts**
**Requirements:**
- A Bachelor degree from UGC approved University / HEI.
- Preference will be given to those who are having experience in handling the electronic medical record and using computers for variety of tasks in both health & research filed.

**Remuneration:** A monthly salary of LKR 35,000.00 will be paid.

Applicants are requested to send the prescribed application form downloaded from the University website along with copies of the Education Certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach the **Country Lead, Global NIHR – AF Project, Department of Community & Family Medicine, Faculty of Medicine, University of Jaffna.** In order to avoid any delay, applicants are expected to submit their application forms with the scanned copies of all the relevant documents (mentioned above) through the **E-mail** (afsl@univ.jfn.ac.lk) on or before 08.09.2021.

**General note to all the above posts**
- All selected candidates will be appointed as full time on contract basis for **six months**.
- Should be a citizen of Sri Lanka.
- Ability to work in the field of any part of Northern Province, Sri Lanka.
- Age should be above 21 years.
- All selected candidates will become a contributor to the Employee Provident Fund (EPF) and the Employee Trust Fund (ETF): the employee should contribute 8% of the monthly salary to the EPF and the employer 12% & 3% of the monthly salary to EPF & ETF, respectively.
- The candidates who apply for **more than one** post should submit **separate application for each of the posts**
- Incomplete and Illegible applications and applications received after the closing date will be rejected without intimation.
- **Only short- listed applicants** will be called for interview **via zoom** (due to the COVID 19 pandemic situation). Zoom Link will be sent to the shortlisted applicants via email.

For further details, please refer the University of Jaffna website - www.jfn.ac.lk
**Registrar**
**University of Jaffna**

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (26.07.2021) திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
## அண்ணாமலை இரத்தினசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.08.2021) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (25.08.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல்லத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையினால் ஒவ்வொருவரையும் தனித்தனியாக நேரில் வருகைதந்து அழைக்க முடியவில்லை என்பதனை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இத்தருணத்தில் எமது துக்கத்தில் கலந்து கொண்டு எல்லா வழிகளிலும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இடைக்குறிச்சி கிழக்கு,
வரணி.

குடும்பத்தினர்
தொலைபேசி இலக்கம்
**077 6389964**

# துயர் பகிர்வு

தோற்றம்
14
11
1929



மறைவு
23
08
2021

## திருமதி சுப்பையா பாக்கியம்

சந்தை வீதி, ஆவரங்கால் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா பாக்கியம் அவர்கள் நேற்று (23.08.2021) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி தங்கம்மா அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சோதிப்பிள்ளை, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற புவனேந்திரன் மற்றும் நித்தியானந்தன் (பிரான்ஸ்), சுப்பிரமணியம் (அமெரிக்கா), ஜெகதாம்பாள் (ஆவரங்கால்), கமலேஸ்வரி (டென்மார்க்), குலம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான காசிநவரத்தினம், மனோன்மணி மற்றும் சிவகுமாரி (பிரான்ஸ்), ரேணுகா (அமெரிக்கா), காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் தியாகராஜா (டென்மார்க்), மகாலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவதர்சினி (கனடா), அம்பிகை (அவுஸ்திரேலியா), காசிராஜன் (கனடா), காசிரூபன் (இத்தாலி), அபிராமி (கொழும்பு), அம்பிகா (மாங்குளம்), துவாரகன் (பிரான்ஸ்), உமையவள் (பிரான்ஸ்), விஸ்ணுகரன் (பிரான்ஸ்), சாயிஜெகன் (அமெரிக்கா), தாரணி (சுவிஸ்), கணேசதாசன் (ஆவரங்கால்), தர்மினி (ஆவரங்கால்), சாரங்கா (டென்மார்க்), ஆதவன் (டென்மார்க்), விதுரன் (லண்டன்), வீஷ்மன் (லண்டன்), வைஷ்ணவி (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஹரி, கிரன், நிலா, சந்தோஷ், சகானா, சஞ்சய், டிலன், அனுஜா, அரிஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.08.2021) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஆவரங்காலிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, அன்னாரின் பூதவுடல் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தல்லை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 6687 266**

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

அங்கு 737 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இது தெரியவந்தது.

அதன்படி, யாழ்ப்பாண மாவட்டத்தில், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 29 பேருக்கும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் மூவருக்கும், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 29 பேருக்கும், பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 10 பேருக்கும், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் 14 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் இருவருக்கும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குமாக 102 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், இரணைமடு விமானப்படை முகாமில் 7 பேருக்கும், புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 25 பேருக்கும், மன்னார் கடற்படை முகாமில் இருவருக்கும், மாந்தை கிழக்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், மன்னார், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைகள், செட்டிகுளம் ஆதார மருத்துவமனை, நெடுங்கேணி பிரதேச மருத்துவமனை ஆகியவற்றில் தலா ஒவ்வொருவருக்கும், வவுனியா மாவட்ட மருத்துவமனையில் இருவருக்குமாக 42 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (த)

## 4,353....

டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவே நாளொன்றில் இதுவரை அடையாளம் காணப்பட்ட அதிகளவிலான தொற்றாளர்களின் எண்ணிக்கையாகும். அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 94 ஆயிரத்து 353 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 222 பேர் குணமடைந்துள்ளனர். அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 44 ஆயிரத்து 381 ஆக உயர்வடைந்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-22)

## 103 பெண்கள்...

களும், 91 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 20 ஆண்கள், 29 பெண்கள் என 49 பேர் 30 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 145 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 71 ஆண்களும், 74 பெண்களும் அடங்குகின்றனர். இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 560 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## முல்லையிலும்...

மாவட்ட மருத்துவமனையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்ட அவருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன்போதே, அவருக்குக் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பி.சி.ஆர். பரிசோதனை எடுக்கப்பட்டு உறுதிப்படுத்த யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டநிலையில், அவர் நேற்று உயிரிழந்துள்ளார். கலாவத்தை பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய வயோதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நாயாற்றில் தென்னிலங்கையில் இருந்து வருகைதந்த பருவகால மீனவர்கள் பலருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஜுலை மாதம் 03 ஆம் திகதி குறித்த பகுதி முடக்கப்பட்டது. பலருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 50க்கும் மேற்பட்டவர்கள் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். அதனால் முடக்கப்பட்டிருந்த குறித்த பகுதி தனிமைப்படுத்தலில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் பருவகால மீனவர்களில் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார். (த-19)

## யாழ்ப்பாணத்தில்...

சிகிச்சை பெற்றுவந்த ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 83 வயதுடைய பெண் ஒருவரும், யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவரும், யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த இஸ்லாமிய ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்தனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்19 நோய்த்தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 201ஆக உயர்வடைந்துள்ளது.

## சட்டப்போராளி...

ளிக்காது உயிரிழந்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் உட்பட, நாட்டில் முக்கியமான பல வழக்குகளில் முற்பட்டு தனது வாதத்திறமையால் நியாயத்தை பெற்றுக்கொடுத்தவர்களில் கௌரிசங்கரி தவராசா குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒருவர். இந்தநிலையில் அவர் கொரோனாவால் நேற்று உயிரிழந்தார்.

இதேவேளை, ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவும் கொரோனாத் தொற்றால் பீடிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## வாள்வெட்டுக்கு...

கரை வீதியில் திருச்சிலுவை சுகநல நிலையத்துக்கு அண்மையாக நேற்று முன்தினம் மாலை ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரை வேறு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் துரத்திச்சென்ற நால்வர் வழிமறித்து சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் படுகாயமடைந்த மூவரும் குருதி வெள்ளத்தில் கிடந்த நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள், குறித்த மூவரையும் மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்திருந்தனர்.

மூவரில் ஒருவரின் கால்கள் இரண்டும் கடுமையாக வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியிருந்தன. அந்த நபரே சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-26)

## கோரியது...

முடக்கத்தால் வருமானத்தை இழக்கும், பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வழங்க அரசு தீர்மானித்துள்ளது. அதற்குத் தகுதியான குடும்பங்களின் விவரங்கள் பிரதேச செயலகங்களால் திரட்டப்பட்டன. 56 ஆயிரத்து 372 பேருக்குத் தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்ட நிலையில், 36 ஆயிரம் பேருக்குரிய கொடுப்பனவே மாவட்டச் செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில், நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 146 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் 146 குடும்பங்களுக்கும் கொடுப்பனவு வழங்கப்பட்டவுள்ளது. வேலணை பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 537 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் ஆயிரத்து 537 குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 635 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் 635 குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளது. காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 518 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் 518 குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 710 குடும்பங்க ளுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் 3 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 965 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் ஆயிரத்து 850 குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 289 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் 2 ஆயிரத்து 485 குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 343 குடும்பங்களுக்கு தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் 2 ஆயிரத்து 50 குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 6 ஆயிரத்து 488 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் 3 ஆயிரத்து 950 குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 8 ஆயிரத்து 374 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் 5 ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 179 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் ஆயிரத்து 179 குடும்பங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 874 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் 3 ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரத்து 849 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் 4 ஆயிரத்து 800 குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 688 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் ஆயிரத்து 650 குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 797 குடும்பங்களுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் 3 ஆயிரம் குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## 5ஆவது...

ஈடுபட்டிருந்த நிலையில், தீ விபத்துக்குள்ளாகி ஹிஷாலினி உயிரிழந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

அவருடைய உயிரிழப்புத் தொடர்பான வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சம்பவத்தின் 5 ஆவது சந்தேகநபராக ரிஷாத் பதியுதீன் பெயரிடப்பட்டுள்ளார்.

இதேவேளை, சிறுமியின் உயிரிழப்பைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட ரிஷாத் பதியுதீனின் மனைவி, அவரின் தந்தை மற்றும் குறித்த சிறுமியை வீட்டு வேலைக்கு அழைத்து வந்த தரகர் உள்ளிட்டவர்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார். (த-22)

*(தொடர்புடைய செய்தி 6ஆம் பக்கம்)*

## பெயர்....

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை இடம் பெற்றது. வவுனியா உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தார்.

அந்த நபர், காய்ச்சல் காரணமாக வவுனியா மருத்துவமனை அருகிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு சிகிச்சை பெறச் சென்றுள்ளார். அவரது உடல் நிலையை அவதானித்த தனியார் மருத்துமனையைச் சேர்ந்தவர்கள் குறித்த நபரை வவுனியா பொது மருத்துவமனைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளனர். இதனையடுத்து அந்தநபர் வவுனியா பொது மருத்துவமனைக்குச் சென்று அங்கு சிகிச்சை பெறுவதற்காக தனது பெயர் விவரங்களை பதிவு செய்துகொண்டிருந்த போதே கீழே வீழ்ந்து உயிரிழந்தார். (த-18)

## அமைச்சர்களின்...

கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது அமைச்சர்கள் தமது மாத சம்பளத்தை கொவிட் நிதியத்துக்கு வழங்க வேண்டும் என்ற யோசனையை பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்வைத்துள்ளார். அதற்கு அமைச்சர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் மாதச் சம்பளம் கொரோனா நிதி யத்துக்கு வழங்கப்படும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (த-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்சினாட்டி ரென்னிஸ்: சுவரேவ் சம்பியனானார்



**வொஷிங்டன், ஓக. 24**
**அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கு முன்னர் நடைபெறும், சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் சுவரேவ்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஜேர்மனிய வீரர் சுவரேவ், ரஷ்ய வீரர் ஆந்த்ரே மோதினர். போட்டியின் ஆரம்பம் முதலே சுவரேவ் அதிரடியாக ஆடினார். இதனால் முதல் செற்றை 6:2 என்ற கணக்கில் கைப்பற்றினார். இரண்டாவது செற்றிலும் சுவரேவ் ஆதிக்கம் செலுத்தி அந்த செற்றை 6:3 என்று கைப்பற்றினார். முதலிரு செற்களின் முடிவில் 2:0 என்ற கணக்கில் சுவரேவ் கிண்ணம் வென்றார். (ம)



## சிமித்தின் உருவத்தையொத்த அமெரிக்க இராணுவச் சிப்பாய்

காபூல், ஓக. 24
ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல் சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்க இராணுவம் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளது. அங்கு பணியாற்றும் சிப்பாய் ஒருவரின் முகமும் உடற்தோற்றமும் ஆஸ்திரேலியாவின் கிரிக்கெட் வீரர் சிமித்தைப் போன்றுள்ளமை வைரலாகி வருகின்றது.
இது தொடர்பில் நெட்டிசன்கள் பலரும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.
'அமெரிக்க இராணுவ வீரர் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் சிமித்தைப் போலவே இருக்கிறார்' என ஒரு பயனர் குறிப்பிட்டுள்ளார்.
மற்றொரு பயனர், 'இதோ உங்கள் ஆடு. அவர் தனது நேரத்தை வீணாக்காமல் உயிர்களை காப்பாற்றுகிறார்' என்றார்.
மற்றொருவர், 'சிமித் என்ன செய்கிறார்? உண்மையில் இது பெரிய வேலை' என பதிவிட்டுள்ளார். (ம)

## இந்தியா - இங்கிலாந்து நாளை 3ஆவது டெஸ்ட்

லீட்ஸ், ஓக. 24
இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை லீட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.
தொடரின் முதலாவது ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்ட நிலையில், இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்று 1:0 என்று முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் நாளை மூன்றாவது ஆட்டம் ஆரம்பமாகின்றது. (ம)





## ஹர்திக் பாண்டியா பருமனாக வேண்டும்

### பட் சொல்கின்றார்

மும்பை, ஓக. 24
மூன்று வகையான ஆட்டங்களிலும் சிறப்பாகச் செயற்பட வேண்டுமாயின் பாண்டியா கொஞ்சம் பருமனாக வேண்டும் என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான சல்மான் பட்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஹர்திக்பாண்டியாவின் முக்கிய பிரச்சினை அவர் ஒல்லியாக இருப்பது தான். அறுவைச் சிகிச்சைக்குப்பின் பந்து வீச்சின் கூடுதல் சுமையை அவரது உடலால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் ஹர்திக் பாண்டியா உடலை சற்று பருமனாக்க வேண்டும்.
இந்தியா அவர் மீது அதிக நம்பிக்கை கொண்டிருந்தது. அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்கு முன் பந்துவீச் போதுமான வேகத்துடன் செயல் கொண்டவராக இருந்தார். லாக முயற்சி மேற்கொள்வ அவர் ஒல்லியாக இருப்பது க உள்ளது - என்றார். (ம)

## ஆஸ்லே பார்டி சம்பியனானார்!

வொஷிங்டன், ஓக. 24
அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் ஆஸ்லே பார்டி.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலிய வீராங்கனையான ஆஸ்லே பார்டியும் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த ஜில்டிமெனும் மோதினர். முதலிரு செற்களையும் 6:3, 6:1 என்ற கணக்கில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் கிண்ணம் வென்றார் பார்டி. (ம)



## 26ஆம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 26 | | 11 |
| 10 | | 09 |
| 1942 | | 1995 |



### அமரர் முருகேசு கனகசபை

(ஆசிரியர்)

திதி - ஆவணி அபரபக்க துதியை

ஆண்டுகள் இருபத்து ஆறு ஆனதுவே !
ஆயினும் மாண்டிடுமோ உம் நினைவு !
நும் தூய அன்பும் எதற்கும்
துவண்டிடா நிமிர் நெஞ்சும்
நாம் வாழ வழி காட்டுதப்பா !
வையத்தே எமை என்றும்
வாழ்த்தி வழி காட்டிடுங்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

கைதடி - நுணாவில்
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ... நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.